
இதழ்-09

16.09.2020

# தூமை

பல்கலை மின்னிதழ்



பெருவெள்ளத்திற்கான பயணம்

# வேருக்குத்தான் தேவை மருத்துவம்...!!!




கடந்த பத்தாம் திகதி உலக தற்கொலை தவிர்ப்பு தினம் உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்ட நேரத்தில் எமது மண்ணில் இளம் காதலர்கள் இருவர் தற்கொலை செய்தியும் அறியக்கிடைத்தது.

தற்கொலை தவிர்ப்பு தினம் என்பது தற்கொலை செய்ய நினைப்பவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் தினம் மட்டுமல்ல. ஒருவனையோ ஒருத்தியையோ தற்கொலை செய்யுமளவிற்கு விரக்தியை ஏற்படுத்தி, இந்த உலகத்தில் வாழ விடாமல் செய்து விடாதீர்கள் என சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் தினமும் தான். உலகத்தில் நடக்கும் அநியாயங்களையும், அசிங்கங்களையும் கண்டு, பொங்கி எல்லோராலும் புரட்சி செய்ய முடியாது. பலர் தம்மை அந்த அசிங்கங்களுக்குள் பழக்கப்படுத்திக்கொண்டு அனுசரித்து வாழ்ந்து விடுகிறார்கள். இயலாதவர்கள் இறந்து விடுகிறார்கள்.

தற்கொலை செய்வது தவறுதான், குற்றம் தான், கோழைத்தனம் தான். மறுக்கவில்லை. ஆனால், சமீப காலமாக இடம்பெறும் தற்கொலைகளில் சமூகத்தின் பிற்போக்குத்தனமான செயற்பாடுகள் முக்கிய காரணிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. சமூக பிற்போக்குத்தனங்கள் என்ன என்ன? பல திறமைகள் இருந்தும் பிள்ளையின் பரீட்சை புள்ளிகளை குறிவைக்கும் சமூகம், மனங்களால் இணைந்து விட்ட இருவரை சாதியால் பிரித்துவைக்கும் சமூகம் என எமது சமூகத்தில் ஆழமாக ஊடுருவியுள்ள இது போன்ற பிற்போக்குத்தனங்களை களையாமல் தினங்களை அனுஷ்டிப்பதால் மட்டும் எதுவுமே மாறி விடாது.

இலைகள் கருகுவது கண்ணிற்கு தெரிகிறதென்பதற்காக நோய் இலைகளில் என்று அர்த்தம் இல்லை. வேரிலே பிடித்துள்ள நோய்க்கு இலைகளில் மருந்தடித்து பயனில்லை. இனியொரு இலை கருக முதல் வேருக்கு மருந்தடிப்போம் வாருங்கள்!



thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06
https://thumi-org.github.io

## இவ்விதழில்

# துமித்தலை.


04 கியூபாவின் கதை

07 புலம்பெயர்ந்தவர்களும் வாக்காளர் இடாப்பில் பதியலாம்

08 பாரிசவாதம்

11 கழிவுகளுக்கு ஒரு வங்கி

12 Schrödinger's Cat

14 திரைத்தமிழ் - அருவி

16 நல்லவேளை செத்துப்போனேன்

20 வேண்டுதல்

21 குடாநாட்டின் சுற்றுலா - ஆய்வுத்தொடர்

24 சிங்ககிரித்தலைவன்

26 தேவன் கோயில் மணியோசை

29 தற்கொலை எனும் பேரழிவு

31 சித்திராங்கதா

34 குறுக்கெழுத்துப்போட்டி

35 ஊடகவியலாளருக்கு எமனாகும் எமன்

38 வழுக்கியாறு - ஆய்வுத்தொடர்

39 யுவராஜ் எனும் யுக வீரன்


அன்பானவர்களே,

தவிர்க்க முடியாத காரணங்களால் சட்டத்தின் சாரல் மற்றும் என் இதயம் எழுதும் சொல் ஆகிய தொடர்கள் இம் மின்னிதழில் இடம்பெறவில்லை. மன்னித்தருள வேண்டுகிறோம்.


# கியூபாவின் கதை

நா. விநோத்

கியூபா அமெரிக்க நாட்டிற்கு மிக அருகில் இருக்கும் ஒரு அழகிய குட்டித் தீவு நாடு. இந்தியாவிற்கு மிக அருகில் இலங்கை இருப்பதுபோல். அமெரிக்காவின் தென் கோடியிலிருந்து கியூபாவின் வட கோடிக்கு 90 மைல் கடல் தான்.

கிறிஸ்டோபர் கொலம்பஸ் இந்தியாவுக்கு வழி கண்டுப்பிடிக்கிறேன்னு கிளம்பி கியூபாவில் 1492இல் வந்திறங்கினார். போப்பாண்டவர் இத்தீவில் வாழும் டைனோ இன மக்களை கத்தோலிக்க கிறிஸ்துவராக மாற்ற, மற்றும் ஆட்சி செய்ய ஸ்பெயினுக்கு அனுமதி கொடுத்ததால், "இது ஸ்பெயின் பேரரசின் காலனி" என்று சில வருடங்களில் மாற்றிவிட்டனர்.

ஸ்பெயின் நாட்டு மக்களை கியூபாவின் டைனோ மக்கள் எதிர்த்தாலும், ஸ்பெயினிலிருந்து வந்த பெரியம்மை போன்ற நோய்களுக்கு எதிர்ப்பு சக்தி இல்லாததால் பல லட்சக்கணக்கான மக்களாக வாழ்ந்து வந்த டைனோ மக்கள் வெறும் 500 பேராக குறைந்துவிட்டனர். மேலும் ஸ்பெயின் பேரரசு டைனோ




மக்களை சண்டையிட்டுத் தோற்கடித்தது. ஒண்ட வந்தப் பிடாரி ஊர் பிடாரியை விரட்டியதுபோல்.
ஸ்பெயின் கியூபாவிற்கு கருப்பர் இன மக்களை அடிமைகளாக கொண்டுவந்து கரும்பு விவசாயம் செய்தது. பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் மூன்று பேரரசுகளும் அங்குள்ள தீவுகளை (ஜமைக்கா, ஹெய்டி போல) அவ்வப்போது கைப்பற்றி,



ஒருவருக்கொருவர் சண்டைகள் போட்டு கை மாற்றிக் கொண்டார்கள். இறுதியில் கியூபா ஸ்பெயினின் கட்டுப்பாட்டில் இருந்தது. பிரிட்டன் அமெரிக்காவில் 13 காலனிகளை நிறுவியது. 1783இல் அமெரிக்க நாடு பிரிட்டனின் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றது.
1898இல் ஸ்பெயின் பேரரசிற்கும் அமெரிக்க நாட்டிற்குமிடையே போர் மூண்டது. அமெரிக்கா போரில் எளிதாக வென்றது. அப்போது ஸ்பெயினுக்கு பேஸ்மென்ட் ரொம்பவே வீக். அமெரிக்காவின் ஆதரவு பெற்ற ஆட்சியாளர்கள் கியூபா நாட்டின் தலைமை பதவிக்கு வந்தனர். கியூபாவின் பொருளாதாரம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. அமெரிக்காவிற்கு சாதகமாக வர்த்தகம் நடந்து வந்தது.

1940இல் ஃபுல்ஜென்சியோ படிஸ்டா ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த தேர்தல்களில் வேறு சில ஜனாதிபதிகள் வந்து போனாலும் 1952இல் படிஸ்டா மீண்டும் ஜனாதிபதியானார். பிடல் காஸ்ட்ரோ என்ற ஒரு 33 வயது

இளைஞன் படிஸ்டாவின் ஆட்சி ஊழலை எதிர்த்துப் போராடினார். 26 ஜூலை 1953இல் மோன்காடோ என்ற ஒரு இராணுவ கொட்டகையை (Moncado barracks) சிலருடன் சேர்ந்து தாக்கினார். இராணுவம் காஸ்ட்ரோ மற்றும் அவர் கூட்டாளிகளை மிக எளிதில் தோற்கடித்து கைது செய்தது. காஸ்ட்ரோ மற்றும் அவர் நண்பர்கள் சிறையிலடைக்கப் பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். பிடல் காஸ்ட்ரோவின் தம்பி ராவுல் காஸ்ட்ரோவும் அவரோடு சேர்ந்தே இருந்தார்.

காஸ்ட்ரோ மனம் வெதும்பி மெக்ஸிகோ நாட்டிற்கு சென்றார். அங்கு அர்ஜென்டினாவை சேர்ந்த எர்னஸ்டோ சே குவேரா என்ற மருத்துவம் படித்த இளைஞனை சந்தித்தார். அவர்களுக்கு இடையே நட்பு ஏற்பட்டு கியூபா மீது மீண்டும் படையெடுக்க முடிவு செய்தனர். 1956இல் Granma என்ற ஒரு சிறு கப்பலில் தன் தம்பி ராவுல் காஸ்ட்ரோ, எர்னஸ்டோ சே குவேராவுடன் சேர்ந்து 82 பேருடன் கியூபாவை கடல் மார்க்கமாக தாக்கினர். மீண்டும் படிஸ்டாவின் படைகள் காஸ்ட்ரோ மற்றும் அவர் கூட்டாளிகளை எளிதில் தோற்கடித்தது. ஆனால் பிடல், ராவுல் காஸ்ட்ரோ, எர்னஸ்டோ சே குவேராவுடன் சேர்ந்து 12 பேர் தப்பி அருகிலுள்ள சியரா மாஸ்ட்ரா என்ற மலைப் பகுதிக்குள் தஞ்சம் புகுந்தனர். அங்கிருந்து கொரில்லாப் போராட்டம் நிகழ்த்தினர்.

1959இல் பிடல் காஸ்ட்ரோவின் படைகள் படிஸ்டாவின் ராணுவத்தை வென்றது. பிடல் மற்றும் நண்பர்கள் வெற்றிகரமாக கியூபாவின் தலைநகருக்குள் நுழைந்தனர். படிஸ்டா ஸ்பெயின் நாட்டில் தஞ்சமடைந்தார்.



சில ஜனாதிபதிகள் வந்து போனாலும் 1976இல் பிடல் காஸ்ட்ரோ ஜனாதிபதியானார். 2008 வரை அவரே சர்வாதிகார ஜனாதிபதியாக இருந்தார். அவரிடம் சில காலம் மந்திரியாக இருந்த சே குவேரா பின்னர் சில ஆப்பிரிக்க நாடுகளுக்கு சென்று அமெரிக்கா ஆதரவு படைகளுக்கு எதிராக போர் செய்து 1967இல் உயிரிழந்தார். உலகில் பலராலும் சர்வதேச போராளி என்று போற்றப்படுபவர் எர்னஸ்டோ சே குவேரா. பிடல் காஸ்ட்ரோ கம்யூனிஸ்ட் ஆட்சி முறை செய்தார். அமெரிக்காவின் எதிரியான சோவியத் யூனியனுக்கு காஸ்ட்ரோ நெருங்கிய நண்பரானார். அவர் ஆட்சிக்கு வந்தபின் அமெரிக்காவுக்கு சாதகமாக இருந்த அனைத்து உடன்படிக்கைகளையும் ரத்து செய்து கியூபாவிலிருந்த அமெரிக்க நிறுவனங்களை தேசிய மயமாக்கினார். அதனால் அமெரிக்கா அவரை ஜென்ம விரோதியாக பார்த்தது.


1961இல் அமெரிக்காவின் கென்னடி அரசு CIA தலைமையில் Bay of Pigs என்ற ஒரு தாக்குதல் நடத்தியது. அமெரிக்காவின் ராணுவம் இதில் பங்கேற்கவில்லை. இத்தாக்குதல் சொதப்பலாக நடந்து, தோல்வியில் முடிந்து, காஸ்ட்ரோ தப்பினார். இந்த தாக்குதலால் மிகவும் காண்டான காஸ்ட்ரோ, சோவியத் யூனியனின் அணு ஆயுதங்களை ரகசியமாக வைத்தார். கென்னெடியின் அரசு செயற்கை கோள்களின் உதவியால் இதை கண்டுபிடித்துவிட்டது. சோவியத் யூனியன் மீது இதனால் மரண காண்டான அமெரிக்கா, "இந்த அணு ஆயுதங்களை வெளியேற்றுகிறீர்களா இல்லை உலகப் போரை துவக்கலாமா" என்று மிரட்டியது. அப்போது உலகப்போரை விரும்பாத சோவியத் யூனியன் அணு ஆயுதங்களை வெளியேற்றியது.

காஸ்ட்ரோவின் அமெரிக்கா எதிர் நிலைமை தீவிரம் அடைந்து தொடர்ந்தது. சோவியத் யூனியன் 1991இல் நொறுங்கியபின் கியூபாவின் பொருளாதாரம் மிக மோசமான நிலை அடைந்தது.



2008இல் உடல் நிலை குன்றிய பிடல் காஸ்ட்ரோ ஜனாதிபதி பதவியை தம்பி ராவுல் காஸ்ட்ரோவிடம் கொடுத்தார். 2011இல் 85 வயதில் பிடல் காஸ்ட்ரோ உடல் நலம் குன்றி இறந்தார். ராவுல் காஸ்ட்ரோவும் சில வருடங்கள் கழித்து வயது காரணமாக ஜனாதிபதி பதவியை மிகேல் டைஸ் கனால் என்றவரிடம் கொடுத்தார். ராவுல் காஸ்ட்ரோ முதல் காரியதரிசி என்ற பதவியில் தொடர்ந்து இன்றும் இருக்கிறார். இப்போதும் கியூபாவின் அதிகாரம் ராவுல் காஸ்ட்ரோவிடமே உள்ளது. கம்யூனிஸ்ட் ஆட்சி கியூபாவின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்து விட்டது. அதனால் கியூபாவிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் அமெரிக்காவிற்கு கள்ளத்தோணி மூலம் தப்பிச் சென்றனர். பிடல் காஸ்ட்ரோ ஆட்சியில் கியூபாவில் நிறைய மருத்துவர்கள் உருவாக்கப்பட்டு அந்நாட்டில் மருத்துவ சேவை மிக நன்றாக உள்ளது. ஆனால் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளது. ஒபாமா ஆட்சியின் பொது அமெரிக்கா-கியூபா உறவு மெதுவாக முன்னேறத் தொடங்கியது. டிரம்ப் ஆட்சியில் அந்த முன்னேற்றம் மீண்டும் குறைந்தது. ஆனால் முன்பிருந்த அமெரிக்கா-கியூபா விரோதம் இப்போது இல்லை.

## அட்டைப்படம் பற்றி...



கயிறு ஒன்றுதான். சிலருக்கு ஏறும் ஏணியாக வாழ்க்கை தரும். சிலருக்கு தூக்குக் கயிறாக வாழ்க்கையை அழிக்கும். அது கயிற்றின் கைகளில் என்று தப்பிப்பவர்களும் உண்டு. அது எங்கள் கைகளில் என விதி என்று விதிக்கப்பட்டவற்றை மாற்றுபவர்களும் உண்டு. கல்யாணமும் அப்படித்தான்.

எண்ணம் போல்த்தான் வாழ்க்கையே தவிர வாழ்க்கையை அதன் போக்கில் விட்டு விட்டு எண்ணங்களை மாற்றாதீர்கள்!!!

**ஓவியம் :~ நயனி**
**பக்க வடிவமைப்பு :~ ரிஷி**

# புலம் பெயர்ந்தவர்களும் வாக்காளர் இடாப்பில் பதியலாம்.

*1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 96 – 98ஆம் உறுப்புரைகளில் தேர்தல் மாவட்ட தெரிவு மற்றும் பாராளுமன்ற ஆசன எண்ணிக்கை ஒதுக்கீடு தொடர்பில் விபரமாக கூறப்பட்டுள்ளது. இலங்கை பாராளுமன்றத்திற்கான ஆசன ஒதுக்கீட்டில் 29 தேசியப்பட்டியல் மற்றும் மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையான தலா நான்கு வீதம் 36 ஆசனங்களும் ஆரம்பத்திலேயே ஒதுக்கப்படுகிறது. மிகுதி 160 ஆசனங்களுமே 22 தேர்தல் மாவட்டங்களினதும் தேருநர் இடாப்பில் (வாக்காளர் இடாப்பு) உள்ள எண்ணிக்கையின் விகிதாசாரங்களுக்கு ஏற்ப பகிரப்படும்.*

*இலங்கையின் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் தேருநர் இடாப்பில் பதிவு செய்த மொத்த வாக்காளர் எண்ணிக்கையை 160ஆசனங்களால் பிரிக்க பெறப்படும் முழு எண் 'தகைமை பெறுதொகை' எனக்குறியீடு செய்யப்படும். அத்தகைமை பெறுதொகையால் ஒவ்வொரு மாவட்ட தேருநர் இடாப்பு எண்ணிக்கையையும் பிரிப்பதன் மூலம் கிடைக்கப்பெறும் முழு எண்களின் அடிப்படையிலேயே ஆசனங்கள் தேர்தல் மாவட்டங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆக இலங்கை பாராளுமன்ற ஆசன பகிர்வில் தேருநர் இடாப்பில் பதிவை உறுதி செய்யும் எண்ணிக்கையே தீர்மானிக்கும் சக்தி பெறுகிறது. இந்நிலையறியாது பலரும் தேருநர் இடாப்பு மீளாய்வு காலத்தை மெத்தனக்கடந்து செல்லும் போக்கு காணப்படுகிறது.*

*30 ஆண்டு காலப்போர் அதலால் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் புலம்பெயர்வு சார்ந்த பிரச்சினைகளால் தமிழ் சமுகத்தின் சனத்தொகையே பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது. அதன்வழி வாக்காளர் எண்ணிக்கையும் பாரிய விழ்ச்சியடைந்து வந்துள்ளது. அதன் பிரதிபலிப்பே வடக்கு, கிழக்கில் அதிக ஆசனங்களை கொண்டுள்ள யாழ்ப்பாணம் – கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 2010ஆம் ஆண்டு 9ஆசனங்களிலிருந்து 2015ஆம் ஆண்டு இரு ஆசனங்களை இழந்து 7 ஆசனங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இனிவரும் தேர்தலில் மேலும் 2 குறைவடைந்து 5 ஆகவும் வாய்ப்பு உண்டெனவே எதிர்வு கூறப்படுகிறது.*

*குறைவடைய எதிர்வுகூறப்படும் ஆசனத்தை பலப்படுத்த, தமிழர்களின் தேருநர் இடாப்பு பதிவு எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். குறிப்பாக, இலங்கை குடியுரிமை உடைய புலம்பெயர் இலங்கையர்களை தேருநர் இடாப்பில் பதிவு செய்ய, தேருநர் இடாப்பு மீளாய்வு காலப்பகுதியில் புலம்பெயர் தேசத்தில் வாழ்பவரின் உறவினர் உரிமை கோரல் விண்ணப்பப்படிவம் பெற்று புலம்பெயர்ந்து உள்ளவரின் அடையாள அட்டை பிரதி மற்றும் கடவுச்சீட்டு பிரதியையும் இணைத்து விண்ணப்பிப்பதன் மூலம் பதிவு செய்து கொள்ளலாம்.*


*வருடந்தோறும் ஆடி மாதம் நடைபெறும் தேருநர் இடாப்பு மீளாய்வு செயற்பாடானது, இவ்வருடம் கொரோனா முடக்கம் மற்றும் ஆகஸ்ட்-5 பாராளுமன்ற தேர்தல் காரணமாக செப்டெம்பர்-2 தொடக்கம் செப்டெம்பர்-25 வரை நடைபெறுகின்றது. ஒவ்வொருவரும் தங்கள் கடமையுணர்ந்து செயற்படுவார்களேயானால் பாராளுமன்றத்தில் வடக்கு, கிழக்கின் ஆசனங்களை தக்க வைத்துக்கொள்வதுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் அதிகரிக்கவும் வழிவகைசெய்யலாம்.*

**சனநாயகன்**

**செப்டம்பர் 25 வரை மட்டுமே காலக்கெடு!!!**

# பாரிசவாதம் (Stroke)

ஆதிகால மனிதனுக்கும் அன்றொயிட் கால மனிதனுக்கும் எவ்வளவு மாற்றங்கள். அப்பிள் மரத்தின் கீழ் படுத்து உறங்கிய நியூட்டனின் மூளை ,அப்பிளை எடுத்து உண்ண நினைக்காது வேறு விதமாக சிந்தித்தது. சரி அதுவும் வேண்டாம். ஆதாம் ஏவால் மீது காதல் கொண்டான் என்றால் அவன் மூளையின் சில இரசாயனம் ஆறாய் ஓடியது என்று தானே அர்த்தம். எனவே



மனிதனின் தொழிற்பாட்டு மையமே இந்த மூளை தானே. அது போய்விட்டால் எல்லாமே போய்விடும். ஆனால் அப்படிப்பட்ட மூளையை நாசகாரம் செய்ய எத்தனை நோய்கள் இன்று பெருகி விட்டது? அப்படிப்பட்ட ஒரு நோய்தான் இந்த பாரிசவாதம் எனப்படும் *stroke* . எனவே இந்த வாரம் துமியின் மருத்துவ கட்டுரை பாரிசவாதம் பற்றி கூறுகிறது.

மூளைக்கு குருதி விநியோகம் செய்யும் குருதிக்குளாய்கள் பாதிக்கப்படுவதால் மூளையின் ஒரு பகுதி இயங்காமல் விடும் நிலை பாரிசவாதம் என்று சொல்வர். உதாரணமாக எமது கால் கையை கட்டுப்படுத்த, பேச, கண் பார்வைக்காக, கேட்க என்றெல்லாம் மூளையில் தனித்தனியாக பகுதிகள் உண்டு. அந்தப்பகுதிக்கு குருதி விநியோகம் தடைப்பட்டால் அவ்வளவுதான் கதை. மூளையின் குறித்த பகுதி இறந்து , குறித்த உடலின் பாகத்தில் இயக்கம் இன்றி போகும்.

பாரிசவாதம் இரண்டு முறையில் ஏற்படலாம். 1- 80 வீதமானவை மூளைக்கு குருதி வழங்கும் குருதிக்குளாய்கள் தடைப்பட்டு ஏற்படும். பொதுவாக மூளைக்கு இரத்தத்தை வழங்கும் குருதிக்குளாய்களில் உள்ள குருதி உறைவதால் இது ஏற்படும். பலவகையில் இந்த இரத்தக்கட்டி ஏற்பட முடியும். அதில் பிரதானமாக , *atherosclerosis occlusion of large arteries.* அதாவது கொழுப்பு கட்டிகள் வெடித்து அடை பட முடியும். இதைவிட இவ்வாறான கட்டிகள் இதயம் போன்ற இடங்களில் உருவாகி இரத்தத்தால் அடித்து வரப்பட்டு மூளையின் குருதிக்குளாய்களில் அடைப்பை ஏற்படுத்த முடியும். *(Embolism)*

2-20 வீதமானவை குருதிக்குளாய்களில் வெடிப்பு ஏற்பட்டு இரத்தக்கசிவால் ஏற்படும். பொதுவாக திடீரென அதிகரிக்கும் குருதி அமுக்கத்தால் இரத்த குளாய்கள் வெடிப்பதால் இது ஏற்படும்.

இந்த இரண்டு வகையான பாரிச வாதமும் பொதுவாக CT ஸ்கான் மூலம் வேறுபடுத்தப்படும்.

பொதுவாக பாரிசவாதம் என்பது மெல்ல மெல்ல ஏற்படுவது அல்ல. அதாவது சாதாரணமாக அன்றாட வேலைபார்த்துக் கொண்டு இருப்பவர்களிற்கு , திடீரென ஏற்பட முடியும். இன்னுமொரு பகுதியினருக்கு இரவு நேர நித்திரையில் அவர்களை அறியாமலே பாரிசவாதம் ஏற்பட முடியும். இதில் என்னவொரு விடயம் என்றால் , மாரடைப்பு நித்திரையில் ஏற்படும் போது நெஞ்சுப்பகுதியில் கடுமையான வலி ஏற்படுவதால் நித்திரையில் இருந்து முளித்து விட முடியும். ஆனால் பாரிசவாதம் ஏற்படும் போது தலையிலே கடுமையான வலிகள் ஏற்படுவதில்லை. ஆகவே காலையில் நித்திரைவிட்டு எழுந்து கொள்ளும்





சுகமாரன் சுஜன்.
4ம் வருடம்,
கொழும்பு மருத்துவ பீடம்.

வேளையில் தான் உடலின் ஒரு பகுதி இயக்கம் இன்றி போனதை அறிந்து அவசரமாய் வைத்தியசாலை செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

### பொதுவாக பாரிச வாதத்தின் அறிகுறிகள் எவ்வாறு இருக்கும்?

மனிதர்களிற்கு வலது மூளை, இடது மூளை என இரண்டு பகுதிகள் உண்டு. அதிலே உடலின் வலது பக்கத்தின் தொழிலை இடது மூளையும், உடலின் இடது பக்கத்தின் தொழிலை வலது மூளையும் கட்டுப்படுத்தும்.



அதிலும் மூளையில், உடலின் வெவ்வேறு பகுதிகளை கட்டுப்படுத்த என வெவ்வேறு தொழிற்பாட்டு பகுதிகள் உண்டு. எனவே எந்தப்பகுதியிற்கு உரிய குருதி விநியோகம் தடைப்படுகிறதோ அந்தப்பகுதிக்குரிய மூளையின் கலங்கள் இறந்து குறித்த பகுதியால் கட்டுப்படுத்தப்படும் உடலின் பாகம் செயலிழக்கும். உதாரணமாக இடது மூளையில், கையின் தொழிற்பாட்டை கட்டுப்படுத்தும் பகுதி பாதிக்கும் போது, வலது கை செயலிழக்கும். அதாவது கையை அசைக்க முடியாத நிலை, கை பாரமாக உணருதல், உணர்வு அற்ற நிலை என்பன ஏற்படும்.சிலருக்கு கண்பார்வையில் பாதிப்பு ஏற்படலாம்

இதைவிட மூளையில், எமது மொழி/ தொடர்பாடலோடு தொடர்புடைய சில முக்கிய பகுதிகள் உண்டு ( *wernicke area , broca's area* ). இந்தப்பகுதிகள் பாதிக்கும் போது, பிறர் பேசுவதை விளங்கிக்கொள்ள முடியாத நிலை( *aphasia*) பேச்சை உருவாக்க முடியாத நிலை ஏற்படும். மற்றும் பாரிச வாதம் ஏற்படும் போது மூளையின் மின்சார கடத்தலில் ஏற்படும் பாதிப்பால் சில வேளைகளில் வலிப்பு ஏற்பட முடியும். சிலவேளை பாரிசவாதம் ஏற்பட்டு சில மாதங்கள், வருடங்கள் கடந்து கூட வலிப்பு ஏற்படலாம்( *scarring*). மற்றும் மூளையில் மிகப்பெரிய பகுதி இறக்கும் போது ( *large infarction*), இறந்த பகுதியில் ஏற்படும் இரசாயன மாற்றங்களால் இறந்த பகுதியில் வீக்கம் ஏற்பட்டு, அமுக்கம் அதிகரிப்பதால் ( *intra cranial pressure*), தலை இடி, சுய நினைவு இழத்தல் என்பன படிப்படியாக ஏற்படும்.

மேலே கூறப்பட்ட நோய் அறிகுறிகள் எல்லாம், சடுதியாக ஏற்படுவன ஆகும். பாரிசவாதம் தவிர்ந்த ஏனைய மூளையின் பிரச்சனைகளாலும் மேல் கூறிய நோய் அறிகுறிகள் ஏற்படக்கூடும். ஆனால் படிப்படியாக ஏற்படும். இதைவிட பாரிசவாதத்தால் ஏற்படும் இந்த நோய் அறிகுறிகள் குறைந்தது 24 மணித்தியாலயங்களிற்கு மேலே நீடித்து நிற்க வேண்டும். சிலரிற்கு இவ்வாறான நோய் அறிகுறிகள் ஏற்பட்டு சில நிமிடங்களோ, மணித்தியாலயங்களோ நீடித்து வழமைக்கு திரும்பும். இதை *transient ischemic attack* என்று சொல்வர். பொதுவாக மூளையில் ஏற்படும் மிகச்சிறிய அடைப்புக்கள் காரணமாக மூளைக்கலங்கள் இறக்காததால் இவை உடனடியாக வழமைக்கு திரும்பும். ஆதலால் பலர் வைத்தியசாலை நாடுவதில்லை. ஆனால் என்ன பிரச்சனை என்றால், இவர்களிற்கு மீண்டும் பாரிசவாதம் ஏற்படுவதற்குரிய வாய்ப்பு அதிகமாகும். எனவே வைத்தியசாலை நாடி சிகிச்சை பெற வேண்டும்.

மற்றும் ஒருமுறை பாரிசவாதம் ஏற்பட்டவர்களிற்கு மீண்டும் பாரிசவாதம் ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே பாரிசவாதம் ஏற்பட்டதற்குரிய அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலை நாடுவதன் மூலம், மீண்டும் மூளைக்குரிய குருதி விநியோகத்தை சரி செய்வதன் மூலம் பாதிப்பை குறைக்கலாம். ஆனால் இறந்த மூளையின் பகுதிகளை புதிப்பிக்க முடியாவிட்டாலும், இறக்காத பகுதிகளை

பாதுகாக்க முடியும். எனவே மிக விரைவாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதன் மூலமே நோயாளியின் எதிர்காலம் தங்கி உள்ளது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதன் மூலம் CT ஸ்கான் மூலம் , பாரிசவாதம், என்ன வகையான பாரிசவாதம் என்பன உறுதிப்படுத்தப்படும்.

இரத்தக்கட்டியால் ஏற்பட்ட பாரிசவாதம் எனின் மருந்துகள் மூலம் இரத்தக்கட்டி கரைக்கப்படும். *Recombinant tissue plasminogen activator* மூலம் கரைக்கப்படும். ஆனால் இந்த வகை மருந்துகள், பாரிசவாதம் ஏற்பட்டு 4.5 மணித்தியாலயத்திற்குள்ளேதான் வேலை செய்யும். 4.5 மணித்தியாலயம் தாண்டி விடின் *mechanical thrombectomy* மூலம் இரத்தக்கட்டி கரைக்கப்படும். எனவே குறைந்தது 4.5 மணித்தியாலயத்திற்குள்ளேயாவது நோயாளி அனுமதிக்கப்படவேண்டும். இதைவிட பாரிசவாதம் ஏற்பட்ட பின் *physiotherapy* மூலம் பாதிக்கப்பட்ட அங்கங்களிற்கு பயிற்சி வழங்கப்படும்.

எனவே பாரிசவாதம் ஏற்பட்டதன் பின் சிகிச்சை பெறுவதை விட , ஏற்படாமல் தடுப்பதே சிறந்த வழி. அதாவது , குருதி அமுக்கத்தை கட்டிப்பாட்டில் வைத்திருத்தல், கொலஸ்திரோல் கட்டுப்பாடு, உடல்பயிற்சி, உடல் நிறை கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு என்பனவே சிறந்த முறைகள் ஆகும்.





புதுஅகவையில் நாளைய தலைமுறைகளின் கற்றலுக்கு அளிக்கும் ஈகைக்கு கொடையாளர்களுக்கு வாழ்த்துகள்!!!

சிங்கை திரு.மோகன்ராசு அவர்களுடைய ஒருங்கிணைப்பில், சிங்கை திரு.மதுசூதன் அவர்களின் புதுஅகவையில், யா/தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மாணவனுக்கு புதிய துவிச்சக்கர வண்டி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

இலண்டன் குறோளி தமிழ்கல்விக்கூடத்தின் நிர்வாகி, திரு. சிவசீலன் அவர்களின், பிள்ளைகளான, செந்தமிழ் செல்வர்கள், சி.வள்ளுவன், சி.ஔவை, ஆகியோரின் புதுஅகவையில், யா/நவாலி மகா வித்தியாலய இருபத்தைந்து மாணவர்களுக்கு, அடுத்த தவணைக்காக பயன்படுத்தும் வகையில் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

*'தாமின் புறுவ துலகின் புறக்கண்டு காமுறுவர் கற்றறிந் தார்.'*




இச்செயற்றிட்டத்தின் பெயர் "PHINILA" ஆகும். இச்செயற்றிட்டமானது இலங்கையில் ஜா-எல (Ja-Ela), வத்தளை (Watala), மற்றும் சாவகச்சேரி (Chavakacheri) ஆகிய இடங்களில் முதற்கட்டமாக செயற்படுத்தப்படுகிறது. இச்செயற்றிட்டத்தில் சேகரிப்பாளர்கள் மூலம் சேகரிக்கப்படும் உக்காத கழிவுகள் இவ்வள நிலையத்தில் தரம் பிரிக்கப்பட்டு அதனை மூலதனமாக்கும் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் சேகரிப்பாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுகிறது. அத்தோடு உக்காத கழிவுகளை அகற்றுவதற்கான சிறந்த முகாமைத்துவம் மேற்கொள்ளப்படுவதோடு, கழிவுகள் மூலதனமாக்கப்படுகின்றது. கழிவுகளை சேகரிக்கும் வளநிலையத்தோடு இணைத்ததாக அதனை தரம் *Plant*உம் நிறுவப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் வறிய மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்துவதோடு, சிறந்த கழிவகற்றும் முகாமைத்துவமும் இருப்பது குறிப்பிடத்தக்கது. இதனை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்க வேண்டியது எமது கடமையாகும்.

# கழிவுகளுக்கு ஒரு வங்கி

*World Vision Lanka*இன் அனுசரணையுடன் உக்காத அனைத்து வகையான கழிவுகளையும் சேகரித்து, அதனை தரம் பிரித்து அதனை மூலதனமாக்குவதற்கான *Resource Bank* சாவகச்சேரி நகரப்பகுதியில் *11/09/2020* அன்று திறந்து வைக்கப்பட்டது. இச்செயற்பாடானது உலகளாவியரீதியில் பிலிப்பைன்ஸ் *(Philippines)*, இந்தோனேசியா *(Indonesia)*, மற்றும் இலங்கை *(Srilanka)* ஆகிய நாடுகளின் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் சிறந்த கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கிலும் அமுல்படுத்தப்படுகிறது.






வை. ஐங்கரன்
B.Sc in Nursing (Honns)


# Schrödinger's Cat

கோபி பிரகாஷ் திருக்குமரநாதன்



தலைப்பை பார்த்தவுடனேயே *Dark* ரசிகர்களுக்கு "அட இது அதுல" என்று தோணலாம். ஆம் அதே தான், *Johnas Khanwald* மரணத்திற்கு பின்னர் எப்படி மீண்டும் உயிர்த்து வந்தான் என்பதற்கு விளக்கம் கொடுத்த *Schrodinger's Cat* எனப்படுகின்ற சிந்தனைப் பரிசோதனையைப் பற்றித்தான் இவ்வார மறுபக்கத்தில் அலசவுள்ளோம். பொதுவாக *Physics*ஐ *Classic Physics* மற்றும் *Quantum Physics* என்று வகைப்படுத்துவார்கள். நியூட்டனின் தலையின் மீது விழுந்த *Apple* தான் *Classic Physics* இற்கான அகரத்தை அடியெடுத்து கொடுத்தது. *Classic Physics* இற்கே உரித்தான சிறப்பியல்பு யாதெனில் அதன் கூறுகளின் பண்புகளை துல்லியமாக அளவிட்டு கணிக்கமுடியும். உதாரணமாக நியூட்டனின் தலையில் விழுந்த *Apple*ஐ யே எடுத்துக் கொண்டால் அது மரத்திலிருந்து விழுந்த உயரத்தை வைத்துக்கொண்டு நியூட்டனின் தலையில் விழும்போது அதன் வேகம், அதற்கு எடுத்த நேரம் என அந்நிகழ்ச்சியின் உடைய கூறுகளின் பண்புகளை திட்டவட்டமாக அளவிட முடியும். ஆனால் *Quantum Physics* என்பது அவ்வாறல்ல. அவை முற்றுமுழுதாக நிகழ்தகவுகளைக் கொண்டே கட்டமைக்கப்பட்டது. அதாவது "இருக்கு ஆனா இல்லை, இருக்கு ஆனா வேற மாறி இருக்கு" என்று *Sj Surya* பாணியைக் கொண்டது தான் *Quantum Physics*. "பொறு எதோ பூனைய வச்சு பரிசோதனை என்டு சொல்லிட்டு இப்ப *Physics*க்கு விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்காய் " என்ற உங்கள் கேள்விக்கணைகளுடன் இவ்வார துமியின் மறுபக்கத்திற்குள் நுழைவோம்.

*Quantum Physics* இனுடைய அகராதியில் தவிர்க்க முடியாத ஒரு நபர்தான் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த *Erwin Schrodinger.* இவர் பூனையை வைத்து மேற்கொண்ட பரிசோதனை தான் பின்னாளில் *Schrodinger's Cat Thought Experiment* எனப் பெயர் பெற்றது. இப்பரிசோதனை மிகவும் எளிமையான கட்டமைப்பைக் கொண்டது. உயிருள்ள பூனையை சிறிதளவு சுவாசிக்கும் வசதியுடன் ஒரு பெட்டியில் வைத்து மூடி கூடவே பெட்டியினுள் மிகச்சொற்பளவு கதிரியக்க தனிமத்தையும் (சும்மா பேச்சுக்கு ஒரு அணு என்டு வச்சுக்கொள்ளுங்க) வைத்து அதன் அருகில் ஒரு சுத்தியலையும் *HCN* குப்பியையும் வைத்து பெட்டியை முழுவதுமாக மூடி விடுவது. ஒரு வேளை அவ்வணு கதிரியக்கத்தை வெளிவிட்டால் சுத்தியல் இயக்கப்பட்டு குப்பி உடைக்கப்பட்டு விஷவாயு வெளியே வந்து பூனை இறந்துவிடும். அதேவேளை கதிரியக்கத்தை அணு வெளியிடவில்லை என்றால் பூனை உயிருடன் இருக்கும். ஆக கதிரியக்கத்தை வெளியிடுவதற்கும் வெளியிடாமைக்குமான நிகழ்தகவு 50க்கு 50 என்றால் பூனை உயிருடன் இருப்பதற்கும் உயிர் இல்லாமல் இருப்பதற்குமான நிகழ்தகவும் 50 க்கு 50




மறுபக்கம்

தான். இப்பொழுது உங்களிடம் என்னுடைய கேள்வி என்னவென்றால் பூனை உயிருடன் இருக்கின்றாதா/இல்லையா?

“அட என்னடாப்பா நீ சின்னபுள்ளத்தனமா கேட்டுக்கிட்டு பெட்டியை திறந்து பாரத்தா தெரிய போது" என்று நீங்கள் கூறலாம்.அங்கு தான் Schrodinger தன்னுடைய வினாவையே எழுப்புகின்றார்.அதாவது "பெட்டியை திறக்க முன் பூனை உயிருடன் இருந்ததா /இல்லையா?".ஆக பெட்டியை திறக்கும் வரைக்கும் கதிர்ப்பு வெளிவராவிட்டால் பூனை உயிருடன் இருக்கலாம் அல்லது இறந்து இருக்கலாம். சுருக்கமாகச் சொன்னால் இப்பொழுது பூனை உயிருடன் இறந்து இருக்கலாம்/இறந்து உயிருடன் இருக்கலாம். தெளிவாகக் குழப்புகின்றது அல்லவா இதனைத்தான் பார்வையாளரின் முரண்குழப்பம் (Observer's Pardox) என்று அழைப்பார்கள்.

நிகழ்தகவுகளை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட Quantum Physics இல் குறித்த ஒரு முடிவை பெறுவதற்கான செயற்பாடுதான் "அளத்தல்" எனப்படுகின்றது. உண்மையை சொல்லப்போனால் "அளத்தல்" செயன்முறைதான் முடிவையே பெற்றுத்தருகின்றது . எளிமையாக கூறுவது என்றால் பெட்டியை நாம் திறக்கும் வரைக்கும் பூனை உயிருடன் இருக்கலாம் அல்லது இறந்தும் இருக்கலாம். அதற்கு இரு சாத்தியப்பாடான நிலைகள் காணப்படுகின்றன.ஆனால் நாம் பெட்டியை திறக்கின்ற அந்த செயன்முறைதான் நமக்கு ஒரு முடிவை பெற்றுத்தருகின்றுது. இங்கு பெட்டியைத் திறக்கும் செயன்முறையைத்தான் Quantum Physics "அளத்தல்" என்று கூறுவார்கள். Copenhagen விளக்கம் கூறுவதும் இதனைத்தான் குறித்த கூறை நாம் "அளக்க" முன்பாக அது தன்னால் சாத்தியமாக்கூடிய அனைத்து நிலைகளிலும் காணப்படுகின்றது. "அளத்தல்" செயற்பாடின் மூலமாக நாம் தான் அதனை எதோ ஒரு நிலைக்கு மாத்திரம் தள்ளி விடுகின்றோம். உதாரணமாக க.பொ.த சாதாரண தர மாணவனைப் பொறுத்தமட்டில் அவனால் உயர்தரத்தில் எந்தப்பிரிவிலும் கற்கமுடியும். ஆனால் சாதாரணதரப்பரீட்சை மூலம் நாம் அவனை அளப்பதனால் தான் அவனை நாம் குறித்த ஒரு பிரிவிற்கு நிர்ப்பந்தித்து விடுகின்றோம். Quantum Physics கூறுகின்ற இயற்கையின் கோலம் கூட இது தான். நாங்களே குறித்த ஒரு விடயத்தை குறித்த முடிவிற்கு நிரப்பந்தித்துவிட்டு இதுவே நிதர்சனம் என்று கூறித் திரிகின்றோம். இதனைத்தான் இப்பரிசோதனை வாயிலாக Schrodinger உலகிற்கு எடுத்துரைத்தார்.



இப்பரிசோதனை பௌதிகவியலிற்கு மட்டுமல்ல எமது வாழ்க்கைக்கும் கூட ஒரு மிகச்சிறந்த படிப்பினையாக அமையப்பெறுகின்றது .ஆம்,எமது வாழ்க்கையில் நடைபெறுகின்ற எல்லா நிகழ்ச்சிகளும் அனைத்து சாத்தியக்கூறுகளிற்கும் ஏற்ப நிகழ்தகவுகளின் அடிப்படையில் கட்டியெழுப்ப பட்டவையே. ஆனால் நாங்கள் எடுக்கின்ற ஒவ்வோரு முடிவுகளும்(அளத்தல்) தான் எம் நிகழச்சிநிரலை குறித்த ஒரு நிலைக்கு மாத்திரம் கட்டமைத்து விடுகின்றன.எனவே தான் தனுஷ் கூறுவதைப் போல " எண்ணம் போல் வாழ்க்கை, எண்ணம் போல் தான் வாழ்க்கை"

# திரைத்தமிழ்

**கருத்து :** இப்படி குப்பை வாழ்க்கை வாழ்றதுக்கு எய்ட்ஸ் வந்து செத்துப் போகலாம்.

**திரைப்படம் :** அருவி

**எழுதியவர் :** அருண் பிரபு புருசோர்த்தமன்

**காணொளி இணைப்பு :** https://youtu.be/jDx6jXo-4cs

நீங்க எல்லாம் சந்தோசமாவா இருக்குறீங்க? இந்த சமூகம் சொல்லி கொடுக்குற மாதிரி வாழ்ந்தா சந்தோசமா வாழ முடியுமா? அப்படி என்ன சொல்லி கொடுக்குது இந்த சமூகம்?

பொய் சொல்லாதே; தப்பு பண்ணாதே; எதிர்த்து கேள்வி கேட்காத; எல்லா பாரத்தையும் கடவுள் மேல இறக்கி வை. இத எல்லாத்தையும் *Follow* பண்ணினா சந்தோசமா வாழ முடியுமா?
இந்த சமூகத்தில நாம சந்தோசமா வாழனும்னா இந்த *Rules*ஐ மட்டும் *Follow* பண்ணினா போதாது. அதைவிட முக்கியமான ஒரு பொறுப்பு இருக்கு. ஒரு குடும்பம், ரண்டு குழந்தைகள், ஒரு அளவான குடும்பம், மாச சம்பளத்துக்கு ஒரு வேலை, மூனு வேளை சாப்பாடு, ஒரு வீடு சொந்த வீடு, ஒரு சாதாராண *Tv* அது வாங்கியாச்சுனா, ஒரு *LCD* அதுவும் வாங்கியாச்சுதுனா, ஒரு *LED* அதுவும் வாங்கியாச்சுதுனா, இல்லை பத்தாதுக்கு ஒரு *Home Theatre*, முடிஞ்சா ஒரு கார், முடிஞ்சா அதை விட பெரிய கார், அது வந்திடுச்சு வீட்ட 3 கார் இருக்குதுனா, பசங்களுக்கு ஒரு *School*. கண்டிப்பா அது *Government school*ல சேர்க்க கூடாது. ஒரு *Private school, English Medium School. PMEU or Don Boasco. No my kids put only nilambabu*னு நீங்க கூட சொன்னீங்க *madam Phone*ல.

ஒரு வாரத்தில நாலு *Beach*, இல்லைனா ஒரு *Restaurant*, இல்லைனா ஒரு *shoping Mall*, இல்லைனா ஒரு படத்துக்கு கூட்டிட்டு போய், நல்ல *Theatre* இல்லை. அங்க போனா 120 ரூபா. என்ன படம் எடுக்கிறாங்க? ஒரு குடும்பம் 1000 ரூபா செலவு பண்ணி ஒரு படம் பார்க்கப் போனா அந்த படத்தில ஏதாவது இருக்கனுமல்லோ? ஒரு மண்ணாங்கட்டியும் இருக்காது. ஆனா நீ அந்த படத்த பார்த்துதான் ஆஹனும் ஏனுனா அது தான் விதி. இதை தவிர்த்து தேவைப்படுற போதெல்லாம் *Dress, shoe*, செருப்பு, துணிமணி. நீ எவ்ளோ வேணும்னாலும் வாங்கலாம். வாங்கலாம்னு எல்லாம் கிடையாது, வாங்கி தான் ஆகனும். நீ என்ன வாங்கனும்னு உக்காந்து யோசனை பண்ண தேவையில்லை. உன்னை சுத்தி நீ நின்னாலோ, நடந்தாலோ, *Bus*க்கு *Wait* பண்ணினாலோ எங்கு திரும்பினாலும், *Tv, Radio, Newspaper, Internet, Mobile, Road. Road* முழுக்க கடை. கடை முழுக்க *Advertisement. Advertisment* முழுக்க *discount, offer, sale... sale...* முந்துங்கள்...... முந்துங்கள்...... முந்துங்கள்.......
ஆடி *Offer*ல ஆடி போவீங்க ஆடி.

இங்கே ஒரே *Rule* தான்!
பணம்!!!



இந்த சமூகம் என்ன சொல்லுது?
நீ பணக்காரனா இருந்தா உன்னை மதிப்பேன். இல்லாட்டி மதிக்க மாட்டன் Simple.
நீ எங்க வேணா வேலை செய். எவன வேணா சுரண்டி தின்னு. காக்கா பிடி. அடிமையாய் இரு. ஊழல் பண்ணு இலஞ்சம் வாங்கு. குத்து. அடி. மிரட்டு. கொலை பண்ணு. Rape பண்ணு. எத்தனை பேர் வயித்திலேனாலும் மிதி. எவ்வளவு பேர வேணும்னாலும் முட்டாளாக்கு. பல்லாயிரக்கணக்கான, லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பணத்தையென்டாலும் கொள்ளையடி. யாரும் உன்னை தூக்கி போட்டு மிதிக்க மாட்டாங்கள். ஏனென்றால் இந்த சமூகத்தில ஒரே ஒரு விதி தான்.
நீ பணம் சம்பாதிச்சா இந்த சமூகம் உன்னை மதிக்கும். நீ பணம் சம்பாதிக்கேலனா இந்த சமூகம் உன்னை மதிக்காது Simple.

உன் சொந்த வீடு இல்லைனா பொண்டாட்டி கூட பிரச்சினை வரும். உன் சொந்தக்காரங்கள் யாரும் உன்னை மதிக்க மாட்டாங்கள். அப்பா, அம்மா, தம்பி, தங்கச்சி யாரும் உன்னை மதிக்க மாட்டாங்கள். உன் பொண்ணுக்கு பையன் கொடுக்க மாட்டாங்கள். உன் பையனுக்கு பொண்ணு கொடுக்க மாட்டாங்கள்.

நான் எங்க போய் சம்பாதிக்கிறது?
நான் யாருக்காக பணம் சம்பாதிக்கனும்?
18 Dress, சொந்த வீடு, மினரல் Water நாலு ஐஞ்சு கோடி ரூபாக்கு காரு, 120ரூபாக்கு ஒரு கூப்பை மாவும் எனக்கு தேவேல.
அப்ப அதெல்லாம் யாரோட தேவ?
எங்கேயோ இருக்கிற நாலு முதலாளி. அவன நக்கி தின்ன இங்க இருக்கிற 4000 முதலாளி. உலகத்தில இருக்கிற அத்தனை பணக்கார பன்னிகளும் கொழுத்து போக தேவை ஒரு பெரிய Market. அந்த Market தான் இந்தியா. இங்க நம்ம Tvல 100 தடவை விளம்பரம் போட்டான்னா, நீ அவன் Soapஐ வாங்கித்தான் ஆஹனும். வேற வழியே கிடையாது. தினம் தினம் உழைச்சு உழைச்சு ஆசைப்பட்டு ஆசைப்பட்டு தேவையில்லாத குப்பை எல்லாத்தையும் வாங்கி, எதுக்கு வாங்கினம்னதையே மறந்து போய் அடுத்த நாள் காலையில மறுபடி எழுந்திருச்சு உழைச்சு கொட்டனும். அப்பதான் உலகத்தில இருக்கிற அனைத்து பணக்காரங்களும் சந்தோசமா இருப்பாங்கள். அவங்களை சந்தோசமா வைச்சிருக்க தான் கடவுள் உன்னை படைச்சிருக்கிறார்.

இது எல்லாத்தையும் புரிஞ்சு கொண்டு இந்த சமூகம் சொல்லிக்கொடுக்குற மாதிரி உன் தேவையெல்லாம் பூர்த்தி பண்ணிக்கிட்டே செத்துப்போனா தான் இது ஒரு குடும்பம். அப்ப தான் இந்த சமூகம் இந்த குடும்பத்தை ஏத்துக்கும். அப்ப தான் உன்னை இந்த சமூகம் ஏத்துக்கும். இதுக்கெல்லாம் ஒத்துக்கிட்டா தான் இந்த சமூகத்தில என்ன சொல்றது சந்தோசமா வாழ முடியும்.

இப்படி குப்பை வாழ்க்கை வாழ்றதுக்கு எய்ட்ஸ் வந்து செத்துப் போகலாம் என்கிறன்.

**மித்ரசகி**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்த பகுதியில் தமிழ் சினிமாவில் இடம்பெற்ற கருத்துச்செறிவான வசனங்கள் இடம்பெற உள்ளன. நீங்களும் இப்பகுதியில் எழுதலாம். நீங்கள் ரசித்த தரமான தமிழ் சினிமாவில் இடம்பெற்ற வசன நடைகளை எமக்கு தட்டச்சு செய்து அல்லது எழுதி அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :-
thumi2016@gmail.com



தொண்டரடிப்பொடியனின்
கப்பச்சீனோ கதைகள்
நயனி
நல்லவேளை செத்துப்போனேன்






எனது விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனக்கே அழைப்பு இல்லை. கோபித்துக் கொள்ளவும் முடியவில்லை. என் இறந்த நாளை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னை எப்படி அழைப்பார்கள்? என் இறந்த நாளிலும் சிக்கலாம் அவர்களுக்கு! சிலர் செப்டெம்பர் பதினொன்று என்கிறார்கள். பலர் அதற்கடுத்த நாள் என்கிறார்கள். பதினொன்று நள்ளிரவு கடந்து, ஒன்றரை மணியளவில் நான் இறந்ததாய் ஞாபகம். இறந்த நாளை திகதிகளுக்குள் போட்டி போட்டு கொண்டாடுவோரே நான் இறந்த போது எங்கே ஐயா போனீர்கள் ? கண்கள் திறக்க முடியாததால் வந்தவர்களை கணக்கெடுக்காமல் விட்டுவிட்டேன். அது எனக்கு தேவையில்லாததும் தான். வந்தவர்கள் குறைவாம்! இருக்கலாம்.. இல்லை இல்லை இருக்கும்!

யார் யார் வந்திருப்பார்கள்? என்னை ஏற்றாளே ஒருத்தி! செல்லம்மா! அவள் வந்திருப்பாள். ஆனால் அவள் வர நினைத்திருந்தாலும் மயானத்திற்குள் விட்டுருக்குமா இந்த உலகம்? மயானமும் சில ஆண்களைப் போலத்தான் பெண்களை உடலாய் மட்டுமே ஏற்கிறது. வாசலோடு நிறுத்தப்பட்டிருப்பாள் செல்லம்மா! அப்ப கண்ணம்மா? ஹா.. ஹா.. என் கள்ளக்காதலி கண்ணம்மா என்றார்கள்! களவாய் காதலித்தால்த்தான் அவள் கள்ளக்காதலி. என் கவிதை எங்கும் அவளைத்தானே முழங்கினேன்? அதிலும் எங்கள் காதலுக்கு சாதி பிரச்சனையானதாகவும், அதனால்தான் சாதியத்திற்கு எதிராக நான் கிளர்ந்தெழுந்ததாகவும் அவசர அவசரமாக இளவயதிலேயே செல்லம்மாவை எனக்கு திருமணம் செய்து வைத்த பின்னணியும் இதுதான் என்கிறார்கள். இன்னும் சிலர் செல்லம்மாவிற்கு நான் வைத்த செல்லப்பெயர்தான் கண்ணம்மா என்கிறார்கள். என் மனைவியை நான் எப்படி அழைத்தால் உமக்கென்னய்யா? வேறு சிலர் எனக்குப்பிடித்த கண்ணனை பெண்ணாய் காண ஆசை கொண்டதாகவும், கண்ணம்மா என்ற கற்பனையை நானே சிருஷ்டித்ததாகவும் கூறிக்கொண்டு திரிகிறார்கள். அதிலும் சிலரோ கண்ணம்மா என்ற பெண்ணை எனக்குப்பிடித்ததாகவும், அதனால்தான் கண்ணனையே எனக்கு பிடித்ததாகவும் நிறுவ முயல்கிறார்கள். கண்ணம்மா என் காதலியோ? மனைவியோ? கற்பனையோ? அதை அம்பலப்படுத்துவதும் அடைகாப்பதும் என் உரிமை. அடைகாப்பதாய்த்தான் எண்ணம்! அதுவே திண்ணம்!

அது சரி, கண்ணம்மா என் இறுதி ஊர்வலத்திற்கு வந்தாளா? வரவில்லையா? கட்டாயம் வந்திருப்பாள்! இந்த போலிச்சமூக கட்டுக்கள் அவளை முடக்கியிருக்காது. சமூகத்தின் கண்கள் அவளை என்றுமே பாதித்ததில்லை. எல்லைகள் அற்றவள் அவள்.






இறந்த காலத்தை கதைப்பதே பயனில்லை எனும் போது நான் இறந்து போன என் காலத்தை கதைப்பதும் வீண்தானே! நிகழ்காலத்திற்கு வருவோம்!

அங்கே எனக்கான விழா நடந்து கொண்டிருக்கிறது! அடடா... அவர்தான் அந்த விழாவின் தலைமைப்பேச்சாளன் போல் இருக்க வேண்டும். அற்புதமாக பேசுகிறார். எனக்கு நடந்ததை எல்லாம் பக்கத்தில் இருந்து பார்த்ததைப் போல சொல்கிறார். நானே மறந்து விட்ட சம்பவங்களை எல்லாம் எனக்கு நினைவூட்டுகிறார் அந்த அன்பர். அதிசயித்துவிட்டேன். கண்ணனை நான் கற்றறிந்ததைப்போல என்னையும் ஒருவன் முற்றும் உணர்ந்துள்ளானே. முடியவில்லை எனக்கு! அவரை ஆரத்தழுவ ஆசை கொண்டேன். ஆனால் என் அருகில் இருவர் கதைத்த இரகசியமொன்று அவரின் ஒலியை என் செவிகளுக்குள் மௌனிக்கச் செய்தது. சாதி ஒழிப்புக்காய் சத்தமிடும் இவர் சாதி பார்ப்பதில் பலே கெட்டிக்காரராம்.. வேறு சாதிப்பெண்ணை காதலித்த தன் மகனை அருட்டி மிரட்டி இரவோடு இரவாக கட்டாய திருமணம் செய்து வைத்தவராம். அதிர்ந்து விட்டேன் ஒரு கணம்.
என்னைப்பிடித்தவனுக்கு சாதீயம் பிடிக்க சந்தர்ப்பமே இல்லை. ஒன்று அவன் என்னைப்பிடித்தவனாக நடித்துக் கொண்டிருக்கிறான். அல்லையேல், அந்த இரகசியக்குரல்கள் பொய்யுரைத்திருக்க வேண்டும். கேட்பவற்றை எல்லாம் நம்பக்கூடாதென்று தானே என் தலைப்பாகையால் காதையும் மூடி இருக்கிறேன். அவனை அறியாமல் அவனது பேச்சை இனியும் கேட்க ஒப்பவில்லை என் மனம். தீர விசாரிக்க வெளிக்கிட்டேன்.

வீதியில் நான் கண்ட காட்சிகள் என்னையே கேள்விக்குறி ஆக்கின. ஆணும், பெண்ணும் சமமெனக் கொள்ளச்சொன்னேன். ஆனால், இங்கோ பெண்ணுக்குள்ளையே பலவிதம், பலரகம். அந்தக்காலத்துப் பெண்கள் போலவே சில பெண்கள் அடுப்படிக்குள்ளேயே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சில பெண்கள் பணமீட்ட மட்டும் வெளி உலகிற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பெண் சுதந்திரம் இன்னும் பேச்சில் மட்டும் தானா? நான் கண்ட புதுமைப்பெண்ணை இந்த உலகம் காணவே காணாதா? இறுகக் கத்தினேன். அங்கே வருகிறார்கள் உங்கள் புதுமைப்பெண்கள் என்றார்கள். ஆவலுடன் திரும்பிப்பார்த்தேன். ஆண்கள் போல் இருந்தது. அருகில் வர வரத்தான் பெண்களென்று தெரிந்தது. வைரசுக்கு பயந்து முகத்தை மட்டும் முழுமையாய் மூடி இருந்தார்கள். கிழியக்கூடாத இடங்களில் கிழிந்திருந்த ஆடையால் தெரியக்கூடாதன தெரிந்தன. கேட்டால் பாரதியின் கனவை நனவாக்குகிறோமாம். கலாசாரம் காற்றில் பறக்க வைப்பதா ஆடை சுதந்திரம். முழுவதும் மூடி, படி தாண்டாதவளாய் பார்த்திருந்த சமூகத்தைத்தான் எதிர்த்தேன். அரைகுறை ஆடைகளோடு திரிவதும், போதைப்பொருட்கள் பாவிப்பதும் தான் பெண் சுதந்திரம் என்று ஆண்கள் நம்ப வைத்துவிட்டதாக கூட்டத்தில் ஒரு குரல். இருக்கலாம். ஆனால் பெண் அடிமைத்தனத்தை விட இப்படிப்பட்ட பெண் சுதந்திரம் ஆபத்தானது. ஆண் சுதந்திரம் பற்றி யோசிக்க வேண்டிய காலமும் வந்து விட்டதாக சொன்னார்கள். நான் கண்ட சில காட்சிகள் அவற்றை உறுதியும் செய்தன. கொடுமையிலும் கொடுமை என்னவென்றால் இவற்றுக்கெல்லாம் என்னையும், என் எழுத்தையும் பயன்படுத்திக்கொண்டமைதான்.

இன்னொன்றை அடிமைப்படுத்துவது தான் சுதந்திரம் என்று நான் ஒரு போதும் கூறவில்லை. பெண் சுதந்திரம் என ஆண்களையோ, ஆண் சுதந்திரம் என



**நாடகத்தில் காவியத்தில் காத லென்றால் நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்ப**

பெண்களையோ அடிமைப்படுத்துவது எவ்வளவு முட்டாள்தனமானது? ஆண் என்பதாலோ அல்லது பெண் என்பதாலோ அவனோ அவளோ எதையும் பெற்றுவிடவும் கூடாது, இழந்து விடவும் கூடாது. சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும்.


பிள்ளைகளை ஓடி விளையாடச்சொன்னேன். அவர்கள் ஓய்ந்திருந்து, மின் திரையில் பொம்மைகளை ஓட்டி விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். கல்யாண சந்தையில் சாதியும், வரதட்சணையும் முதலிடம் பிடிக்கின்றன. சாதி பார்த்த காதலைத்தான் சமூகமும் ஏற்கிறது. நான் எழுதியது இன்றும் பொருந்தித்தான் போகிறது.

*"நாடகத்தில் காவியத்தில் காத லென்றால்*
*நாட்டி னர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்;*
*ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே*
*ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்;*
*பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார். "*

நான் இருந்த காலத்தில் எழுத்துக்கு இருந்த மரியாதை எழுதியவனுக்கு இருக்கவில்லை. அதை நான் எதிர்பார்க்கவும் இல்லை. நிகழ்காலத்தோடு நான் சமரசம் செய்து கொண்டவன் இல்லை. என் எழுத்தாணிகள் முதலாளிகளின் முதுகைச் சொறியவில்லை. ஆனால் எதிர்காலம் என் எழுத்தோடு, என்னையும் கொண்டாடுகிறதென்று சந்தோசப்பட முடியவில்லை. எழுதிய ஒன்றையுமே கடைப்பிடிக்காமல் வெறும் கொண்டாட்டம் மட்டும் எதற்கு? ஏட்டுச்சுரைக்காயாய் போவதற்கா எழுதினேன்? மறுபடியும் மறுபடியும் வீணையை புழுதியில் தானே எறிகிறீர்கள்? நான் பொந்தில் வைத்த அக்கினிக்குஞ்சை அணையாமல் பார்த்திக்கொள்ளுங்கள் என்றா கேட்டேன். வெந்து தணியட்டும் காடு என்று தானே சொன்னேன். கையில் தண்ணீரோடு காடு எரியாமலுமல்லவா காவல் காக்கிறீர்கள். அக்கினிக்குஞ்சும் அணைந்து விடக்கூடாது; காடும் எரிந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறீர்கள். வெள்ளையர்களை விட ஆபத்தானவர்கள் நீங்கள். பிள்ளையார் பிடிக்க நினைத்தேன். இப்படி குரங்காக்கி விட்டீர்களே!

எழுதிய படி வாழ்ந்தவன் நான்! என் எழுத்துக்களின் படி வாழ மாட்டீர்கள் என்றால், என்னையும் ஏற்காதீர்கள்; என் எழுத்துக்களையும் ஏற்காதீர்கள். கல்லாகிப்போன மனம் கொண்டவர்களே! என்னையும் கல்லாக்கி விடவா சிலை வைத்தீர்கள்? உடைத்தெறிவேன் எல்லாவற்றையும். எழுத்தாணிகளை மட்டுமே ஆயுதமென ஏந்தியவனை ஆயுதமேந்த வைக்காதீர்கள். கொண்டாட மட்டும் தான் என் எழுத்துக்கள் என்றால் அவையும் வேண்டாம் உங்களுக்கு! எரித்து விடுகிறேன் அனைத்தையும்!!!

என் உறவுகளே! இறுதியாக உங்கள் ஒவ்வொருவரிடமும் மன்றாட்டமாக கேட்கிறேன். மூத்த பொய்மைகளை நீக்கி, புதிய உயிராய் பிறந்து வாருங்கள். உங்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள் சொல்லும் முதல் ஆளாய் நான் நின்றிருப்பேன். அன்பால் இணைந்து, சரி சமமான சமூகத்தில் சந்தோசமாக வாழுங்கள்.



**இப்படிக்கு,**
**பாரதியார்**

**நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ**

# வேண்டுதல்!!!

துள்ளித் திரிந்து துடிப்பாய்
துணிந்து நிற்க
தூணாகும் நல்ல
குடும்பம் வேண்டும் - அங்கு

தோளோடு தோள் தட்டி
மடியிருத்தி கைகோர்த்து
அனுபவ பாடம் நாடாத்தும்
அன்பான தந்தை வேண்டும்

சமைந்ததற்காய் ஒடுக்கி
சாரமற்று வளர்க்காது
சந்து பொந்தெல்லாம் புகுந்து
நிமிர்ந்துவாழ வழிசொல்லும் தாய் வேண்டும்

காலில் குத்தும் முள்ளை
மெதுவாய்ப் பிடுங்கிவிட்டு
கவனமாய் வாழச் சொல்லும்
கனிவான அண்ணன் வேண்டும்

அக்கா என அழைத்து
அவ்வப்போது குறும்பாய்
வம்பு செய்து சண்டைபோட
துடிப்பான தம்பி வேண்டும்

உள்ளம் சிதறுண்டு
ஊமையாகும் காயங்களிற்கு
மருந்தாக தோழி வேண்டும்
மரணம் தொடும்வரை அவள் நட்பு
மறையாது இனிக்க வேண்டும்

தலை தொடும் துன்பத்தில்
தோய்ந்து மனம் உடையும் வேளை
தோள் சாய்ந்து அழுது தீர்க்க
தோழன் வேண்டும் - அவன்

கற்பென்றால் உடல் என்ற
கற்பனை விலக்கியவனாய் வேண்டும்
அவன் கைகோர்த்து உலகை
வலம்வர வேண்டும்

நான் பார்க்க முகம் பார்த்து
பார்வை விலக உடல் மேயும்
ஈனமனங் கொண்ட ஆண்கள் நீங்கி
பெண்ணென்ன ஆணின் கீழென்ற
எண்ணத்தை விட்டொழித்து
என் உள்ளத்தை காதல் செய்யும்
ஆண்கள் எனை சூழ வேண்டும்

சின்ன வீடு வேண்டும்
அங்கு அரியணையிட்டு – நான்
அழகாய் சின்னசின்ன சட்டம் வைத்து
ராஜாங்கம் நடாத்திட வேண்டும்

கூடிப் பிரிந்த பின்னும்
கூட அணைத்து தலைகோதும்
தலைவன் வேண்டும் - அவன்
நாட்டிற்கு ராஜாவாய் நிற்கவேண்டும்
வீட்டிற்குள் என் மடிதலைவைத்து
தூங்கும் குழந்தையாய் மாறிட வேண்டும்

செல்லமாய் முத்தமிட சிணுங்கி
அடம்பிடித்து நெஞ்சில்
பிஞ்சுக்காலால் எட்டி உதைத்திட
வாரியணைத்து மகிழ
மழலைச் செல்வம் வேண்டும்

இறைவா இவை அனைத்தும்
நீ தந்திட வேண்டும்
தந்தபின்னே எப்போதும் நான்
பெண்ணாக பிறந்திடல் வேண்டும்

*சிவபாலன் அஜெந்தன்*



# குடாநாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான உபாயமுறைகள் 6

அதிரன்

### மூர்க்கம் கடற்கரை

வடமராட்சிப் பகுதியில் அமைந்துள்ள மூர்க்கம் கடற்கரை பகுதி அண்மைக் காலமாக சுற்றுலா மேற்கொள்வதற்குரிய முக்கிய இடமாக மாற்றப்பட்டுவருகின்றது. வடமராட்சிப் பகுதியிலுள்ள அதிகமான மக்களின் பொழுதுபோக்கு இடமாக வளர்ந்து வருகின்றமை அவதானிக்கத்தக்கது.



### பூங்காக்கள் மற்றும் இயற்கை ஒதுக்குகள்

யாழ்ப்பாணத்தின் குடா நாட்டின் தகவமைவு என்பது புவியியல் அடிப்படையில் ஆறுகளோ பெருங்குளங்களோ இல்லாத கரையோரச் சமவெளியைக்கொண்ட சிறிய நிலப்பரப்பாகும். யாழ்ப்பாண நிலத்தின் நீர் நிலையியல் என்பது பெருமளவில் பருவமழையில் இருந்து பெற்று தேக்கி வைக்கப்பட்ட நிலத்தடி நீரைச்சார்ந்ததாக இருக்கின்றது. உலர்வலயக் காலநிலையினை அனுபவித்து வருகின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயற்கையான ஒதுக்குகள் மற்றும் பூங்காக்கள் ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்தளவிலேயே காணப்படுகின்றன. அவ்வாறான இடங்களுள் பின்வரும் இடங்கள் முதன்மை பெறுகின்றன.

- பூங்காக்கள்
    - சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா
    - யாழ்ப்பாணம் பழைய பூங்கா
    - பூங்கனிச்சோலை
- இயற்கை ஒதுக்குகள்
    - சரசாலை குருவிக்காடு
    - சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயம்

### சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா

சிறுவர்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையங்களில் இதுவும் ஒன்றாகும். சுப்பிரமணியம் பூங்கா எனப் பொதுவாக அறியப்படும் சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா இலங்கையின் வட மாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாண நகரில் உள்ள ஒரு நகர்ப்புறப் பூங்காவாகும். இது யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ளது.

சுப்பிரமணியம் பூங்கா, 1950களில் அப்போதைய யாழ்ப்பாணம் நகரசபையால் உருவாக்கப்பட்டது. உள்ளூர் மருத்துவரான எஸ். சுப்பிரமணியம் பூங்கா அமைப்பதற்குத் தேவையான பெருந்தொகைப் பணத்தை மாநகரசபைக்கு அன்பளிப்பாக வழங்கினார். இதனால் இப் பூங்காவுக்கு அவருடைய பெயரில் சுப்பிரமணியம் பூங்கா எனப் பெயரிடப்பட்டது என தெரியவருகின்றது.



### யாழ்ப்பாணம் பழைய பூங்கா

கண்டி வீதியுடன் இணைந்து கச்சேரிப் பகுதியில் அமைந்துள்ள இப்பூங்கா அண்மைக்காலத்தில் பிரபல்யம் அடைந்துவருகின்ற சிறுவர்கள் சார்ந்த



சுற்றுலா மையங்களில் முதன்மையானதாகும். இலங்கையின் தற்போதைய பிரதமரும் முன்னாள் ஜனாதிபதியுமான கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் நவீனமயப்படுத்தப்பட்டு திறந்துவைக்கப்பட்டதன் பின்னர் அதிகளவு வருவாய் ஈட்டுகின்ற சுற்றுலாத் தளமாக வளர்ந்துவருவது குறிப்பிடத்தக்கது.

### பூங்கனிச்சோலை



யாழ்ப்பாண மாவட்டத்தினுள் அமைந்துள்ள சிறுவர் சார்ந்த சுற்றுலாப் பூங்காக்களில் பூங்கனிச்சோலையும் முக்கியம் பெறுகின்றது. பாடசாலைச் சிறார்களால் அதிகம் விரும்பிப் பார்க்கப்படுகின்ற இடமாக இதனை அடையாளம் செய்யமுடியும்.

### சரசாலை குருவிக்காடு

வடமராட்சியையும் தென்மராட்சியையும் பிரிக்கும் கப்பூது தரவை வெளியின் தொடர்ச்சியாக தென்மராட்சியின் எல்லைக்கிராமங்களான, மந்துவில் சரசாலை முதலான கிராமங்களின் விளிம்பில் இருக்கிறது குருவிக்காடு எனப்படும் சிறிய கண்டல் நிலக்காடு. கிட்டத்தட்ட 500 ஹெக்டேயர் பரப்பளவான கண்டல் காட்டுச்சூழலின் பரம்பலைக்கொண்டது. இப்பகுதியினை மக்கள் "குருவிக்காடு" என்று அழைக்கின்றனர். கண்டல் நிலத்துக்குரிய தாவரப் பல்வகைமையையும், உயிரினப்பல்வகைமையையும் கொண்டுள்ளது, குறிப்பாக மீன்கள், முதலைகள், நண்டுகள், போன்ற உயிரினங்களைத் தனக்குள் வைத்திருக்கின்றது. அத்தோடு பறவைகள், பன்றிகள், நரி, மரநாய் போன்றன வாழ்கின்ற சிறுகாட்டுப்பகுதியாகவும் இருக்கின்றது.

தேசிய பறவைகள் சரணாலயமாகவும் இனப்பெருக்க வலசைகளின் உறைவிடமாகவும் கருதப்படக்கூடியதுடன், சுற்றுலாதளமாகவும் மாற்றப்படக்கூடிய தன்மைகளைக்கொண்டு இருக்கின்றது. குருவிக்காட்டினைப் பொறுத்தவரையில் அது வெளிநாட்டு, உள்நாட்டு வலசைப்பறவைகள் பருவங்களில் இடம்பெயர்ந்து வருகின்ற இடமாக வடமாகாண விவசாய அமைச்சினாலும், தேசிய அரச விபரங்களாலும் இனங்காணப்பட்டுள்ளது. இயற்கையான பறவைகள் மற்றும் வனவிலங்குகள் உலவும் சரணாலயமாக இக்காட்டை அறிவிக்கும் வேலைகள் நடைபெறுவதாக அறிய முடிகின்றது. சுற்றி இருக்கின்ற கிராமங்களின் மனிதத்தொடர்புகளையும், வாழ்வியல் பயன்பாட்டுக்கான பங்களிப்பையும் வழங்குவதுடன், கூட்டு மனநிலையில் ஒரு முக்கிய இயற்கை வளமாக கருதப்படுகின்றது. அத்துடன் இக்குருவிக்காட்டின் சதுப்பு நிலம் அருகில் உள்ள கிராமங்களின் வயல்களில் இருந்து மிதமாக வெளியேறும் நீரை உள்வாங்கிக்கொண்டு விவசாய நடவடிக்கைகளுக்கு உதவுகின்றது. "இலந்தைத்திடல்" என்று அழைக்கப்படும் இச்சவாரித்திடல் குருவிக்காட்டின் ஒரு அங்கமாகவே இருக்கின்றது. இவ்வாறு



மனிதத்தொடர்புகளின் வாழ்வு முறையோடும் இக்கண்டல் நிலக்காடு சேர்ந்துள்ளது.

### சுண்டிக்குளம் தேசிய வனம்



சுண்டிக்குளம் என்பது இலங்கையின் வடக்கே கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள ஓர் எல்லைக் கிராமமாகும். இக்கிராமம் சுண்டிக்குளம் தொடுவாயிற்கும் இந்தியப் பெருங்கடலுக்கும் இடையேயுள்ள குறுகிய இடத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்திலேயே 1938 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பறவைகள் சரணாலயம் உள்ளது.

சுண்டிக்குளம் தேசிய வனம் வட இலங்கையில் அமைந்துள்ள ஒரு தேசிய பூங்கா ஆகும். இது கிளிநொச்சியின் வடகிழக்கில் ஏறக்குறைய 12 km தூரத்தில் அமைந்துள்ளது. சுண்டிக்குளம் கடல் நீரேரியும் அதனைச் சுற்றிலும் காணப்பட்ட இடங்களும் பறவை வனவிலங்குகள் காப்பகம் என 25 பெப்ருவரி 1938 அன்று Fauna and Flora Protection Ordinance (No. 2) of 1937 சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டது.
இப்பகுதி தேசிய வனமாக அறிவிக்கப்பட்டிருப்பதாலும் மக்களின் பொறுப்பற்ற சட்டவிரோத நடவடிக்கைகளாலும் சுற்றுலா தளமாக மாற்றுவதற்குச் சில தடைகள் காணப்படுகின்றன.



# துமியின் இணையதளம்




துமியின் சகல மின்னிதழ்களையும் இந்த இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

https://thumi-org.github.io
இந்த இணைப்பினூடு எமது இணையதளத்திற்கு செல்லலாம்.

அல்லது கூகிள் தேடு பொறியில் (Google search bar) துமி அமையம் என தட்டச்சு செய்வதன் மூலம் எமது இணையதளத்திற்கு செல்லலாம்.



ஜீவா ஷஜீவனின்

# சிங்ககிரித்தலைவன்

ஆட்சி 09

## விதியின் வியூகம்

அனுராதபுரத்து ராஜ வீதியில் காற்றைக் கிழித்துக்கொண்டு அந்த கறுத்த புரவி, ஒரு முக்காடு போட்ட உருவத்தைச் சுமந்தபடி நான்கு கால் பாய்ச்சலில் விரைந்து கொண்டிருக்கிறது... நீண்ட இடைவெளியில் அரண்மனைப் புரவி வீரர்கள் கைகளில் குத்தீட்டிகளோடு புழுதி பறக்க, தங்கள் மன்னனின் உயிரைக் குடிக்கத் துணிந்த கொலைகாரனைக் எப்படியாவது மடக்கிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கள் குதிரைகளை முடுக்கிவிட்ட படி விரைகின்றார்கள்! நகரமே தன் அமைதியைக் கலைத்து ஆரவாரப்படுகிறது... அடுத்தடுத்த அதிர்ச்சியால், அரண்மனை எங்கும் குழப்பம் நிறைந்து ஒருவித கலகத்தை ஏற்படுத்தியிருந்தது! வேறு கொலைகாரர்கள் அரண்மனைக்குள்ளே ஒளித்திருக்கலாம் என்ற அச்சமும், யார் எப்போது துரோகிகளாவார்கள் என்ற பயமும் அந்தக்கலகத்தை மேலும் கலங்கடித்தது! இயற்கையின் அரவணைப்பிலும், மக்களின் முயற்சியாலும் வளம்மிகுந்து கிடக்கும் இந்த ஈழநாடு, காலம்தோறும் கவலை மேகங்களால் சூழப்பட்டு பொலிவிழப்பது தான் பெரும்சோகம்! ஆட்சியாளர்களின் ஆசையாலும், அறம் சொல்ல வேண்டியவர்களின் முறை தவறிய நெறியாலும், இந்தச்சசோகம் ஆண்டாண்டுகளாய்த் தொடரும்! எளியமக்கள் வீழ்வதும், வலிய மக்கள் ஆழ்வதும், வஞ்சகமும், துரோகமும் வாழ்வதும், இந்தத் தீவுக்குப் புதியதல்ல! அது நல்லதுமல்ல!

ராஜவீதியைக்கடந்து வெகுதூரம் அரண்மனை வீரர்கள் தம் குதிரைகளைக் கலைத்துக்கொண்டு வந்துவிட்டனர்! அவர்கள் பார்வையில் இருந்து கறுத்தப்புரவிக்காரன் மறைந்துபோனான்! காட்டுக்குள் பிரிந்துபோய்த்தேடுவதா? இல்லையேல் அரண்மனைக்கு திரும்புவதா? என்ற குழப்பத்தில் வீரர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். காட்டுக்குள் போவது என்பதும், பிரிந்து போய்த்தேடுவது என்பதும், அவ்வளவு எளிதான விடயம் இல்லை என்பது ஒவ்வொரு வீரனுக்கும் தெரிந்தது தான்! என்ன செய்வது என்ற தீர்மானத்திற்கு வருவதற்குள் தூரத்தே குதிரையொன்று கனைக்கும் சத்தம் கேட்டு வீரர்கள் கலவரமடைந்து ஈட்டிகளைத் தயார் நிலையில் வைத்துக்கொண்டு எந்தத்திசையில் இருந்து யார் வெளிப்பட்டாலும் தம்மைத் தற்காத்துக் கொள்வதற்கான வியூகம் அமைத்து நின்றார்கள்.

யார் என்ன வியூகம் அமைத்தாலும், விதி அமைத்த வியூகத்தில் இருந்து யாரால் தப்பித்து வெளியேற முடியும்? மதியால் வெல்வதாயினும், சிந்திப்பதற்கு விதி நேரம் தராது என்பது தான் வருந்தத்தக்க உண்மை! தாதுசேனர் ஆட்சியையும் விதி தன் வியூகத்துக்குள் விழுத்தி விளையாடுகிறது!

தன் தலையருகே அமர்ந்து காயத்திற்கு மருந்து போட்டுக்கொண்டிருந்த முஹலனை சிரமத்தோடு நிமிர்ந்து பார்த்தார். முஹலனின் கண்கள் நீர் கவிந்திருந்தன...

"மகனே... இந்த நாடு ஆபத்தான எதிர்காலத்தை அனுபவிக்கப்போகிறது... அதை பார்ப்பதற்கு நான் உயிரோடு இருக்கப்போவதில்லை. அனால் நீ... எதிர்காலத்தில் எதிர்நோக்கப்போகும் சவால்களை எண்ணி கவலை கொள்கின்றேன்... விசுவாசிகள் யார்... விரோதிகள் யார்... துரோகிகள் யார்? என்று வேறுபிரித்து அறிவதே கடினமாகிப்போய்விட்டது! மகனே எந்த நிலையிலும் மனத்தைத் தளர விடாதே..."

முஹலனின் கைகளை இறுகப்பற்றி பரிதாபமாகப்பார்த்தார் தாதுசேனர்.

“தந்தையே... நீங்கள் நீடு வாழ்வீர்கள்! இந்த துரோகக் கூட்டத்தை வேரோடு பிடுங்கி எறிவேன்..! ஓய்வெடுங்கள்... காயம் ஆழமாக இல்லை என்பதால் ஆபத்தும் இல்லை என்று அரண்மனை வைத்தியர் கூறினார்... “

தாதுசேனர் சிரித்தார்... கண்களைச் சற்று நேரம் மூடிக்கொண்டார்...

“முஹலா... இன்று ஈட்டி தவறியதால் என் மரணம் அதிக நாட்கள் தள்ளிப் போனது என்று அர்த்தமில்லை... உன் தலையில் இந்த நாட்டின் மணிமுடியையும் எதிர்காலத்தையும் தூக்கி வைப்பதற்கு இது தான் பொருத்தமான காலம் என்று இறைவன் உணர்த்தியிருக்கின்றான் அவ்வளவு தான்... மறுக்காதே... சோதிடரை அழைத்து வர சொல்! அந்த நல்ல நாளைப் பார்ப்பதற்காவது எனக்கு வாய்ப்பைத் தா!"

முஹலன் எதுவும் பேசவில்லை... ஆட்சி அதிகாரம் பெறுவது குறித்து அவனுக்கு ஆசை ஏதும் இல்லை... நாம் போடும் கணக்குக்கு மேலே விதி போடும் கணக்கைத் தீர்க்க வேண்டுமே! அது எல்லா நேரத்திலும் எம்மால் எதிர்பார்க்கப்பட்டத்தைப் போல் இருக்காது... என்பது வேறு கதை!

குதிரை வீரர்கள் எதிபார்த்ததைப் போல் யாரும் அவர்களைத் தாக்கவில்லை... குதிரை கனைத்த திசையில் இருந்த ஒற்றையடிப் பாதையால் மிதமான வேகத்தில் மிகவும் கம்பீரமாக அனுராதபுரத்தின் தளபதி மீகாரன் வந்துகொண்டிருந்தான்... ஓரளவு தூரத்திலேயே வீரர்கள் தளபதியை இனங்கண்டுகொண்டு குதிரைகளில் இருந்து இறங்கி மரியாதை செய்தனர்!

"நான்கு வீரர்கள் மட்டும் என்னோடு வாருங்கள்!... மற்றவர்கள், ஏறுங்கள் குதிரைகளில்...விரைந்து அரண்மனை செல்லுங்கள்...! மன்னனைக் கொலைசெய்ய வந்தவனின் தலையைக்கொண்டு தான் இந்த தளபதி அரண்மனை திரும்புவான் என்று மன்னரிடம் சொல்லுங்கள்!" அதிகாரமாய் கோவத்தோடு மீகாரன் கத்தினான்!

" தலை வணங்கிய வீரர்கள் புது வேகம் பெற்றவர்களாய் தம் குதிரைகளைத் திருப்பிக்கொண்டு போனார்கள்!

"நீங்கள் நால்வரும் இந்த ஒற்றையடிப்பாதையால் செல்லுங்கள்! எதிரே ஒரு ஆறு எதிர்ப்படும். அதன் கரையில் காத்திருங்கள்!" கட்டளை பிறந்த வேகத்தில் குதிரைகளும் பறந்தன!

மீகரன் அவர்கள் போன திசைக்கு எதிராக காட்டுக்குள் தன் குதிரையை இறக்கினான்! அந்தக் குதிரையின் பின்னே கட்டப்பட்டிருந்த தோல் பையில் ஒரு கறுத்த மேலங்கி திணிக்கப்பட்டிருந்தது!

**விதி விளையாடும் ....**



# தேவன் கோவில் மணியோசை

இ.தனிஷ்ரன்

மனிதர்கள் அத்தனை பேருக்குமே இந்த உலகத்தில் வாழ ஒரு துணை தேவைப்படுகிறது. தனிமையில் வாழ பயம் என்று காரணம் சொல்லலாம். தனியாக அனைத்தையும் செய்ய முடியாது என்றும் கொள்ளலாம். தனிமை ஒருவனது ஆத்மபலத்தையே உருக்குலைக்க கூடிய ஆயுதம் என்பது இன்னொரு பக்கம்.

"நான்கு கண்ணாடி சுவர்களுக்குள்ளே
நானும் மெழுவர்த்தியும்
தனிமை தனிமையோ
கொடுமை கொடுமையோ"

இந்த தனிமைக்கு பயந்த மனிதன் தனக்கான இன்னொரு துணையை தேடிக்கொண்டு தான் வாழ்க்கை கடலில் எதிர்நீச்சல் போடுகிறான். அப்படி துணையுடன் வாழ்ந்தாலும் தன்னையும் தன் துணைகளையும் இயற்கையின் பிரம்மாண்டத்திலிருந்து காத்துக்கொள்ள தம்மை விட மேலான சக்தியொன்றை தேடுகிறான். இந்த பயத்திலிருந்து விடுபட அவனது ஆன்மா லயித்துப்போக "கடவுள்" என்ற பேரொளி தேவைப்படுகிறது. இருப்பதாக நம்புகிறான். நாளும் தொழுகிறான்.

//யார் யார் சிவம்? நீ நான் சிவம்,
வாழ்வே தவம், அன்பே சிவம்//

கடவுள் என்பதை தனது மனித தோற்றத்தின் உயர் சக்தியாக உருவகிக்கிறான். தன் சக்திக்கு அப்பாற்பட்ட அத்தனை சக்தியையும், தனது மனதின் களங்கத்தை நீக்கும் அப்பழுக்கற்ற நல்ல குணங்கள் நிறைந்த பவித்ரமான சக்தியாக இறைவனை கட்டமைக்கிறான்.

"கடவுள் மனிதனை படைத்தானா
மனிதன் கடவுளை படைத்தானா
இரண்டு பேரும் இல்லையே
ரொம்ப தொல்லையே"

'ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதி' என்று அத்தனை மகாசக்தியையும் கொடுத்து உயர் நிலைக்கு கொண்டு சென்ற பிறகு எல்லையில்லா அன்பு, இரக்கம், கருணை, சாந்தம், பேரறிவு என்ற அத்தனை நல்ல குணங்களும் வீரம், உக்கிரம், ஆசைகள் அத்தனையும் வசப்படும் சக்தி என்று, தனக்கு நடைமுறை சாத்தியமில்லா விஷயங்களையும் கடவுளுக்கு சேர்ப்பித்து கடவுள் என்ற பிம்பத்தை பல சிகரங்களின் மேல் உயர்த்தி புனிதப்படுத்தப்பட்ட இந்த இறைவன், இப்பொழுது ஆசாபாசங்களில் கட்டுண்ட மனிதனுக்கு தூரமாகி விடுகிறான்.

"கடவுள் ஏன் கல்லானார்
மனம் கல்லாய் போன மனிதர்களாலே"



இறைவனுக்கு வகுத்த அதே குணங்களை இவன் அடைந்தால் தான் இறைவனை காணலாம் என்பது இவனை ரொம்பவே

ரசிக்கும் சீமானே

தூரமாக்குகிறது. கடவுளை உருவாக்கியவனே அதற்கு ஒரு வழி கண்டு பிடித்தான். அன்பு. அன்பே கடவுள். அன்பே சிவம்.



//இதயம் என்பது சதைதான் என்றால்
எரிதழல் தின்றுவிடும்,
அன்பின் கருவி இதயம் என்றால்
சாவை வென்றுவிடும்//

எப்பொழுதுமே வன்மத்திலும் சண்டை சச்சரவுகளிலும் போராட்டங்களிலுமாக இயங்கிக்கொண்டிருக்கும் உலகத்தை சீர்ப்படுத்திக் கொண்டிருப்பது அன்பு தான். ஒவ்வொரு உயிருமே தனக்காக அன்பு செய்ய தன் பாசம் அத்தனையையும் கொட்டி கொண்டாட ஒரு ஜீவனைத்தான் தேடி ஓடிக்கொண்டிருக்கிறது.

ஊழியில் உழன்று கொண்டிருக்கும் உலகத்தையும், மக்களையும் தன்னலம் மறந்து பிறர்க்காகவே வாழ்ந்து தேய்ந்து போகும் உயரிய மனித உயிர்களை கடவுளின் வடிவம் என துதிக்க ஆரம்பிக்கின்றான். இயேசு கிறிஸ்து முதல் சேகுவேரா வரை சாமியார்கள் முதல் போராளிகள் வரை கடவுளானது அன்பை விதைத்து தான்.

//அன்பின் பாதை சேர்ந்தவனுக்கு முடிவே இல்லையடா,
மனதின் நீளம் எதுவோ, அதுவே வாழ்வின் நீளமடா//

அன்பு என்றும் அநாதியானது ஆனால் உறவு வழிகளின் அன்பில் பல சந்தர்ப்பங்களில் ஒரு எதிர்பார்க்கை இருக்கும். இரண்டு வேறுபட்ட மனிதர்கள் தங்களது உள்ளார்ந்த தேவைகளை சுமைகளை சுகமாக சுமக்கும் வாழ்க்கைக்கு அவர்களிடையே பாலம் அமைப்பது தான் அன்பு. சகோதரர்கள், காதலி, நண்பர் என நீளும் பட்டியல் இப்படியானது தான்.

"தேவனே என்னை பாருங்கள் என் பாவங்கள் தம்மை
வாங்கிக்கொள்ளுங்கள்"

என்று தன் பாவங்களை கரைத்து வாழ்க்கை மீதான பயத்தை நீக்கும், என்றும் எல்லையில்லா துணை எனும் ஆதாரத்தின் பால் தான் இறையன்பும் பெருக்கெடுத்து பாய்கிறது.

"நீ எனக்குள் புதையலெடுக்க
நானும் உனக்குள் புதையலெடுக்க
உயிரின் ஆழம் சென்று தேடு தேடு"

என காதல் பாசம் காமத்தில் வழி சென்று உடல்கள் இரண்டு கலந்து தேவையை தீர்த்துக் கொள்வதில் தான் அந்த அன்பு ஜீவிதமாகிறது.

"உயிரும் நீயே உடலும் நீயே
உறவும் நீயே தாயே
தன் உடலில் சுமந்து உயிரைப்
பகிர்ந்து உருவம் தருவாய் நீயே"

எம்மை சுற்றிய ஒரு எதிர்பார்ப்பும் இல்லாத அன்பு என்றால் அது தாயன்பு தான். பத்து மாதம் தவமிருந்து படாத துன்பம் எல்லாம் கண்டு பிரசவவலி பொறுத்து பெற்ற பிள்ளை



எப்படியிருப்பான் எப்படி வளர்வான் உலகத்தில் எப்படியாக வரப்போகிறான் என்று நாளும் பொழுதும் கனவு கண்டு தவம் செய்து பிள்ளை பெறுகிறாள் அன்னை.

*"ஈரைந்து மாதங்கள் கருவோடு எனைத்தாங்கி*
*நீ பட்ட பெரும் பாடு அறிவேனம்மா*
*ஈரேழு ஜென்மங்கள் எடுத்தாலும்*
*உழைத்தாலும்*
*உனக்கிங்கு நான் பட்ட கடன் தீருமா"*

தன் பிள்ளைக்கு பாலூட்டி சீராட்டி பாசமழை பொழிந்து, பத்து பிள்ளையிருந்தாலும் பாரபட்சமில்லாது பாசம் காட்ட அம்மாவால் மட்டும் தான் முடியும். இப்படி தான் பெற்ற பிள்ளை தடம் மாறி தவறே செய்திருந்தாலும் தன் பிள்ளை மாசற்றவன் என்று தாய் மனம் தான் இரங்கும். இறைவனின் குணம் அது. நல்லவன் கெட்டவன் என்ற எல்லைகள் கடந்து உயிர்களை சமமாக நேசிப்பது.

*"காமுகன் ஆனாலும் கல்நெஞ்சன் ஆனாலும்*
*கயவன் என்றே அவன் பெயரெடுத்தாலும்*
*பொய் சொல்லி பிழைக்கும் பிள்ளை என்றானாலும்*
*பூமியில் ஆயிரம் தவறு செய்தாலும்*
*தன்மகனோ அவன் யாரான போதும்*
*அவன் நலமே இந்த தாயுள்ளம் தேடும்*
*என்றென்றும் அவள் எண்ணங்கள்*
*நலமாக நாம் வாழ நல்வாழ்த்து கூறும்"*

தான் பட்டினியே கிடந்தாலும் தன் பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து தாய் தியாகத்தில் உயர்கிறாள். தன்னலம் எண்ணாது தன் பிள்ளைகள் நலம் கண்டு மகிழ்வதில் அவள் இன்னொரு மனிதை என்ற வட்டத்தை உடைத்து உயரிய உயிராகிறாள்.



*"சோறு போட தாயிருக்கா பட்டினியை பார்த்ததில்லை*
*தாய் இருக்கும் காரணத்தால் கோவிலுக்கு போனதில்லை"*

உயரிய மனித குணங்களுடன் புனிதப்படுத்தி உருவாக்கிய கடவுள் காண்பதற்கு தூரமாய் சென்று விட கடவுளுக்கென்று கொடுத்த அத்தனை குணங்களையும் தாயிடம் கண்டு தாயே தெய்வம் என்கிறான். தாயே கோவில் என்கிறான். மனித சிஷ்டியின் மகத்தான வடிவம் கடவுள். இறைவன் சிஷ்டியின் உன்னத உயிர் அம்மா.

*"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தா வாங்கலாம்*
*அம்மாவை வாங்க முடியுமா நீயும்?*
*ஆயிரம் உறவு உன்னை தேடி வந்து நின்னாலும்*
*தாய் போல தாங்க முடியுமா?*
*உன்னையும் என்னையும் படைச்சது இங்கே யாருடா?*
*தெய்வம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கிதுன்னா தாய்டா!"*

எந்த வெறுப்புமின்றி அலகிலா அன்பை பொழிய தாயால் மட்டும் தான் முடியும். அது இறைவனின் குணம். இப்பொழுது கடவுள் பக்கத்தில் இருக்கிறார்.

*//ஆத்திகம் பேசும் அடியார்கெல்லாம்*
*சிவமே அன்பாகும்,*
*நாத்திகம் பேசும் நல்லவருக்கோ*
*அன்பே சிவமாகும்//*

# தற்கொலை எனும் பேரழிவு

**க.பானுதீபன்**
ஊடகக்கற்கைகள் துறை
யாழ். பல்கலைக்கழகம்



*தற்கொலை என்பது 'தற்காலிக பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வை தேடுவதே'. ஒரு மனிதன் தனிப்பட்ட நோக்கம் கருதி தானாகவோ அல்லது பிறரால் தூண்டப்பட்டோ தன்னுயிரை மாய்த்துக் கொள்ளுதல் தற்கொலை என்று குறிப்பிடப்படுகிறது.*

*ஒவ்வொரு மனிதரும் சாதாரண வாழ்க்கை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது எதிர்ப்பார்த்தோ அல்லது எதிர்பார்க்காமலோ பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கின்றனர்.*

*அவ்வாறான சந்தர்ப்பங்களில் பலர் அவற்றுக்கு தன்னம்பிக்கையோடு முகம் கொடுத்து வெற்றி பெறுகிறார்கள். ஆனால் சிலர் தன்னம்பிக்கை இழந்து அப்பிரச்சினையால் சோர்வடைகின்றனர்.*

*இவ்வாறான மனப்போராட்டங்கள் உளநலத்தைப் பாதிக்கின்ற போது, அது ஒருவரின் சாதாரண நடத்தையில் மாற்றங்களையும், பாதிப்பையும் ஏற்படுத்துகிறது. இதன் விளைவாகவே தவறான முடிவுகள் எடுக்கப்படுகிறது.*

*உலகெங்கிலும் ஒவ்வொரு ஆண்டும் எட்டு இலட்சம் பேர் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொள்வதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.*

*சராசரியாக 40 வினாடிக்கு ஒருவர் தற்கொலை செய்வதாகவும், தற்கொலை செய்வோரில் அதிகமானோர் 15 – 29 வயதுடையோரும், 70 வயதுக்கு மேற்பட்டோரும் என அவ்வறிக்கை சுட்டுகிறது.*

*அதிகமாக நடுத்தர வருமானத்தை பெறும் நாடுகளிலேயே பெருமளவான உயிரிழப்புக்கள் நடைபெறுகின்றன.*

*உலகளவில் தற்கொலை செய்யும் வீதத்தின் அடிப்படையில் இலங்கையானது நான்காவது இடத்தில் உள்ளது.*

*172 நாடுகளைக் கொண்டு உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலேயே இது கண்டறியப்பட்டுள்ளது.*

*இந்த ஆய்வின் படி முதலாவது இடத்தில் கஜனாவும், இரண்டாவது இடத்தில் வடகொரியாவும், மூன்றாவது இடத்தில் தென் கொரியாவும், நான்காவது இடத்தில் இலங்கையும் காணப்படுகின்றன.*

*சர்வதேச அளவில் 28 நாடுகளில் மட்டுமே தற்கொலையை தடுப்பதற்குரிய உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை வழிமுறைகள் முறையாக வகுக்கப்பட்டுள்ளன. ஏனைய நாடுகளில் அவ்வாறான நிலை இல்லை.*

*பொதுவாக தற்கொலையின் பின்னணியை நோக்குமிடத்து, அவர்கள் ஏதாவது ஒரு மனப்பாதிப்பின் காரணமாகவே இந்த முடிவை எடுக்கின்றனர்.*

உலகளவில் தற்கொலை செய்யும் வீதத்தின் அடிப்படையில் இலங்கையானது நான்காவது இடத்தில் உள்ளது.

**தற்கொலை முயற்சியைத் தடுப்பதற்கான வழிமுறைகள்**

1.தற்கொலை செய்யும் எண்ணத்துடன் இருப்பவரது பிரச்சனைகளை வெளிப்படுத்த சந்தர்ப்பம் வழங்குதல்.

2.தற்கொலைக்கு பயன்படுத்தக் கூடிய ஆபத்தான பொருட்களை அகற்றுதல்

3.தற்கொலை எண்ணம் தீவிரமாக காணப்படின் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்தல்

4.குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உற்ற நண்பர்களுக்கு தெரியப்படுத்தல்.

5.நல்ல நண்பர்களை உருவாக்கி மனச்சுமையை குறைத்து, பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுதல்



6.தற்கொலையால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

7.சம்பந்தப்பட்டவரை யோகாசனம், தியானம் போன்ற சாந்த வழிமுறைகளில் ஈடுபட வைத்தல்

8.வாழ்க்கைக்கு தேவையான திறன்களை கற்றுக் கொடுத்தல்

9.பிரச்சினைகள் ஏற்படும் பொழுது தகுந்த உளவளத்துணை சேவையை பெற்றுக் கொடுத்தல்

10.சிந்தனை மற்றும் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி தொடர் கண்காணிப்பை உறுதி செய்தல்

தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோருக்கு உளவளத்துணை மிகுந்த அவசியமாகிறது.

உளவளத்துணை என்பது ஒருவர் தான் எதிர்கொள்ளும் தடைகளை வெற்றிக் கொள்ள அவருக்கு அளிக்கும் தொடர் செயற்பாடுகளும், ஒருவருக்கு அவரைப் பற்றிய தெளிவை ஏற்படுத்தி அதற்கமைய அவர் எதிர்நோக்கும் பிரச்சினையை அவரே தீர்த்துக் கொள்வதற்கு வழங்கப்படும் உதவிகளும் ஆகும்.

பிரச்சினை ஒன்று வரும் போது கட்டாயம் அதற்கான முடிவும் இருக்கும். ஆனால், பலருக்கும் அத்தீர்வினை அடையாளம் காண்பது என்பது மிகவும் சிரமமாக உள்ளது.

அவர்கள் தமது வாழ்வில் நல்ல முடிவினை எடுப்பதற்கும், அவர்களுக்கு மறைந்திருக்கும் பலங்களை அடையாளம் காண்பதற்கும் உளவளத்துணை உதவி புரிகிறது.

எனவே தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோருக்கும், தற்கொலை எண்ணத்துடன் இருப்பவர்களுக்கும், பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க தெரியாதவர்களுக்கும் உளவளத்துணை மிகவும் அவசியமானதாகும்.

இலங்கை முப்பது வருட கால யுத்தத்தினால் பெரிய இழப்பை கண்டதுடன் வருடாவருடம் இயற்கை அனர்த்தங்களும் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான நிலையில் பெறுமதியான மனித வளம் தற்கொலை எனும் பெயரால் அழிவதை ஏற்றுக்கொள்ள யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

## யார் அவள்?

கலைகள் மனதை நெகிழ வைக்கின்றன.

இந்த மண்ணிற்கு வரலாறாயிருக்கிற துரோகங்களும், இந்த மண்ணில் பரம்பரையாய் பாதுகாக்கப்பட்டு வரும் பலவீனங்களும், எப்போதும் இருந்து வரும் அழுகுரல்களும், அவற்றிற்கு தீர்வு காண வேண்டும் அல்லது அவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற தவிப்பும், தகிப்பும் இந்த மண்ணை காலம் காலமாய் ஆண்டு வந்த மன்னர்களின் ஆழ்மனதில் தேங்கிக்கிடந்து சில நேரங்களில் ஆள்பவர்கள் மனதினை அது ஈரப்பசையே இல்லாமல் வறட்டி விடுகிறது. உள்மனம் பாளம்பாளமாய் பிளந்து விட்டது போன்ற ஒரு பிரமை நிலைக்கு ஆளாக்கிவிடுகிறது.




அந்த நேரத்திலெல்லாம் மனதைக் காயப்படுத்தாத ஒரு மழையைப்போல் கலையை தேடிச்செல்கிறார்கள் ஆள்பவர்கள்.

கூத்து நடந்து முடிந்ததும் வறண்டிருந்த மனத்தினுள் அள்ளி நீர் வார்த்தது போல் சங்கிலியன் மனம் நெகிழ்ந்திருந்தான். கலைகளின் ஆச்சரியம் அவனை களிப்பேருவகை கொள்ளச்செய்திருந்தது.

'எச்சதத்தரே, நாளை காலை வருணகுலத்தாருக்கு வாள் வழங்கும் விழாவல்லவா? அந்நிகழ்வில் நான் இன்னொரு நிகழ்வையும் நிகழ்த்த கோரியிருந்தேனே , ஞாபகமிருக்கிறதா?' என்று கேட்டான்.

**காவ்யமோகன்**

'மறக்கவில்லை அரசே, நிச்சயமாக நாளை சித்திராங்கதா மேடை ஏறுவாள்.'

'உண்மையாகவா? , மிக்கமகிழ்ச்சி எச்சதத்தரே, அரசனானாலும் தங்கள் புதல்வியின் நாட்டியம் காண நான் வேண்டுகோள் தான் விடுத்திருந்தேன். என் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டமைக்கு பெரிய நன்றிகள் எச்சதத்தரே' என்றான்.

'அரசே, தங்கள் பேச்சிற்கு மறுபேச்சு உண்டா? ஆணையிடுவது தாங்கள். ஏற்று நடப்பது எம் பணி அல்லவா?'

'ஆயினும் ஆணையிடுவது எல்லாம் தங்கள் ஆடலரசியிடம் செல்லுபடியாகுமா என்ன? ' என்று கூறியவாறே எச்சதத்தரை பார்த்து நகைத்தான் சங்கிலியன்.

'உண்மையும் தான் அரசே, அரங்கேற்றத்திற்கு குறிக்கப்பட்ட நாளிற்கு முன்னர் மேடையேற மாட்டேன் என விடாபிடியாய் தான் நின்றாள். ஆயினும் நம் வீரத்தளபதி வருணகுலத்தார் பற்றி கூறிய பின்னர்தான் அவள் ஒருவகையாய் சம்மதித்தாள். தாயில்லா பெண் என்பதால் நானும் அவளை அதிகம் கண்டிக்காமலே வளர்த்துவிட்டேன். அதுதான் அரசே..' என எச்சதத்தர் கூறிக்கொண்டிருக்கும் போதே சங்கிலியன் அவசரமாய் குறுக்கிட்டு

**ஆடல் 09**

'தேவையில்லை எச்சத்தரே, சித்திராங்கதாவை எதற்கு கண்டிக்க வேண்டும்? அவள் ஆடலழகால் இந்த உலகையே ஆளும் வல்லமையாள். அவளின் அரங்கேற்ற நாளிற்காய் நானுந்தான் காத்திருக்கிறேன்' என்றான்.
இந்த சம்பாசனை வருணகுலத்தான் கவனத்தையும் ஈர்த்திருந்தது. யாரென்று தெரியாத ஏதோ ஒரு நாட்டியக்காரியைப் பற்றி அரசர் எதற்காக இத்தனை புகழுரை புரிகிறார்? யார் அந்த சித்திராங்கதா? ஆம், எல்லோர் மனதிலும் உள்ள அந்தக்கேள்வி இப்போது வருணகுலத்தானிடம் தொடங்குகிறது.

அரண்மனையில் இதுவரை கண்டதில்லையே? ஓஓ... ஒருவேளை மகாராணி மஞ்சரி தேவியின் அருகிலிருந்து தன்னை வணங்கிய அந்த இளமங்கை அவள்தானோ? என எண்ணங்கள் மேலெழ அவன் மஞ்சரி தேவி அமர்ந்திருந்த ஆசனத்தை நோக்கினான். அந்த இடமே வெறுமையாய் இருந்தது. கூத்து முடிந்து எல்லாபெண்டிர்களும் சென்று விட்டனர்.

'எப்படியும் நாளை அந்த ஆடலரசியின் ஆட்டத்தைக் காணத்தானே போகிறோம்' என்றவாறே வருணகுலத்தானின் சிந்தனை ஒருவாறு அமைதியடைந்தது.

மன்னரிடம் அனுமதி பெற்று விடைபெற்றுக்கொண்டு மந்திரி ஏகாம்பரனாருடன் வருணகுலத்தான் மந்திரிமனை நோக்கிச் சென்றான்.

கோட்டையின் வடக்குபக்கம் அரச ஆரவாரங்கள் குறைந்த ஒரு நிசப்தமான வெளியில் மந்திரியாரின் மாளிகை அமைந்திருந்தது. நள்ளிரவுப்பொழுதிலும் அந்த மாளிகையின் அழகு மின்னும் தீபங்களினால் மிளிர்ந்து கொண்டிருந்தது. மூன்று பக்கங்களாலும் விருந்தினரை வரவேற்கக்கூடிய ஓலக்க வாயிலினை வருணகுலத்தானும் ஏகாம்பரனாரும் வந்தடைந்தனர்.

மாளிகையின் உள்ளேயிருந்து ஓர் இளம்பெண் தீபம் ஏந்திய தட்டோடு வெளியே வந்தாள். தீப ஒளியில் ஒளிர்ந்தபடி புன்னகையில் மின்னிக்கொண்டிருந்த அவள் முகத்தினை வருணகுலத்தான் கண்டான். அவன் முகத்தில் ஓர் ஆச்சர்யம் பிறந்தது.

ஆம், சற்று முன் சித்திராங்கதாவாய் இருக்குமோ? என மனதினுள் ஐயம் கொண்ட அதே பெண்ணினை அவன் இப்போது காண்கிறான்.

மகாராணி மஞ்சரி தேவியின் அருகிலிருந்த இளமங்கை இவளே என தெரிந்து கொண்டாலும் அவன் ஐயம் இன்னும் தீரவில்லை.

தீபமேந்தி வந்த இளம்பெண் 'வருக வருக வீரத்தளபதியாரே, நான் மகாராணி மாருதவல்லி' என கர்வத்தோடு கூறினாள்.

வருணகுலத்தான் மேலும் குழப்பத்தில் ஆழ்ந்தான்.
'ஆயினும் நான் மகாராணி மஞ்சரி தேவியை அவையின் தரிசித்திருந்தேனே?' என குழப்பத்தோடு கேட்டான்.

அதைக்கேட்டு அந்த இளம்பெண் கல கலவென சிரித்தாள். மந்திரி ஏகாம்பரனார் வருணகுலத்தானை நோக்கி 'தளபதி, இவள் என் புதல்வி மாருதவல்லி. விளையாட்டுத்தனமாய் ஏதோ விளையாடுகிறாள். மகாராணியுடன் அந்தப்புரத்தில் தங்கிவிட்டு இங்கு வரும்போதெல்லாம் தான் மந்திரி மனையின் மகாராணி என்று வேடிக்கையாய் சொல்லிக்கொள்வாள்' என்றவாறே மாருதவல்லியை நோக்கி



தீவாகரன்

'மகளே, உன் விளையாட்டிற்கு இதுவா சமயம்? தளபதி ஏற்கனவே களைப்பாக உள்ளார்' என்றார்.

'அப்பா, நான் என்ன விளையாடினேன்? உண்மையைத்தானே சொன்னேன்? இந்த மந்திரி மனையின் மகாராணி இந்த மாருதவல்லி அல்லவா? ' என்று கூறியவாறே தொடர்ந்து சிரித்தாள்.

வருணகுலத்தான் மனதிற்குள் ஐயம் தீர்ந்து தெளிவடைந்தான்.
'சரிதான் மகாராணி, தீபங்கள் மின்னும் இந்த மாளிகையின் மகாராணியாய் தாங்கள் மாத்திரமே இருக்க முடியும். மகாராணிக்கு இந்த வருணகுலத்தானின் வணக்கங்கள்' என்றான்.

இதனைக்கேட்டு மேலும் சிரித்தவாறே 'பார்த்தீர்களா அப்பா, தஞ்சைத்தளபதியே என்னை மகாராணி என்று கூறிவிட்டார். தாங்கள் தான் இன்னும் இதை விளையாட்டு என்று சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். இருக்கட்டும். இதைப்பிறகு பார்த்துக்கொள்கிறேன்.' என்றாள்.

'சரி தான் மகளே, இப்போது நீ தளபதியாரை மாளிகை மேல் மாடத்திற்கு அழைத்துச்சென்று அவர் தங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள். நாளை வாள் வழங்கும் விழாவிற்கு நாம் காலை புறப்பட வேண்டும்' என்றார்.

மாருதவல்லி வருணகுலத்தானை மேல்மாடத்திற்கு அழைத்துச்சென்று அவன் தங்குவதற்கு தேவையான எல்லா வசதிகளையும் விரைவாய் செய்து முடித்தாள். துடிப்பு மிகுந்த மாருதவல்லியுடன் வருணகுலத்தான் வேடிக்கையாகவே உரையாடினான். அவளின் சிரிப்பு வருணகுலத்தானிற்கு மேலும் மகிழ்ச்சியை அளித்தது.

உடலின் அசதியினால் அவன் சிறிது நேரத்திற்குள் எல்லாம் உறங்கிவிட்டான். ஆயினும் அவன் கனவுகளில் ஆயிரம் பெண்கள் நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தனர். ஆழ்மனதில் அந்தக்கேள்வி ஒலித்துக்கொண்டே இருந்தது. இவள் இல்லையென்றால் வேறு யார் அவள்?

**வருவாள்...**

## குறுக்கெழுத்துப்போட்டி – 05

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | 2 மை | 3 ச் | 4 ச | ர் | | 5 றி | த |
| 7 ர | தா | சே | ம் | | 8 ஆ | | ர |
| 9 ங் | ம் | க | ண | 10 க | | 11 ரா | ணி |
| 12 க | ன | ரி | ம் | ச | | ம் | |
| ம் | | | 13 ர | ம் | 14 மி | ய | ம் |
| | 15 ணை | 16 ர | பூ | | 17 ரு | தி | |
| 18 டி | ண் | க | | 19 அ | க | ந் | தை |
| 20 கோ | ப | ம் | | 21 து | ம் | பி | |

### பரிசுக்குரியவர்

குகநாதன் திருமகள்
தரம் - 7
யா/ வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | | 5 | |
| 6 | | | | | 7 | | |
| 8 | | | | | | | |
| | | | | 9 | | | 10 |
| 11 | 12 | | 13 | | | 14 | |
| | | | | | 15 | | |
| 16 | | | | | 17 | 18 | |
| 19 | | | 20 | | | | |




## இடமிருந்து வலம்

*1- வணங்கும் போது சொல்லப்படுவது*
*6- தருணம் என்றும் சொல்லலாம்*
*7- அங்கும் இங்கும் ஆடிக்கொண்டிருப்பது*
*8- இரும்பைக் கவரக்கூடியது (குழம்பி)*
*9- முத்தமிழில் ஒன்று*
*11- பாரதியின் கவிதை நாயகி (குழம்பி)*
*14- தன்மைப்பன்மைச் சொல் (திரும்பி)*
*16- நாளினை குறிப்பிட உதவுவது*
*17- இனிய சொற்களிற்கு வள்ளுவர் இதனை உவமையாக்கினார்*
*19- ஓர் உலோகம்*
*20- இரக்கம் என்றும் சொல்லலாம்*

## மேலிருந்து கீழ்

*1- செழிப்பான பருவ நிலை*
*2- வாசனை என்றும் சொல்லலாம் (குழம்பி)*
*3- ஒரு செயலை செய்வதில் உள்ள கூச்சம் (குழம்பி)*
*4- ஒரு பறவை (குழம்பி)*
*5- நதி கடலுடன் சேருமிடம் (குழம்பி)*
*9- கயிறினைக் குறிக்கும்*
*10- வாத்தியங்களிலிருந்து வரும் ஓசை (குழம்பி)*
*12- குழல் ஊதும் மாயவன் (குழம்பி)*
*13- மலர்களால் ஆன ஆபரணம்*
*15- நா நீரினைத் தேடும் நிலை (தலைகீழ்)*
*16- துள்ளுகிற மாடு இது சுமக்காது என்பது பழமொழி.(தலைகீழ்)*
*18- குளிர் காலத்தின் அடையாளம் (தலைகீழ்)*


**அனுப்ப வேண்டிய.......**
மின்னஞ்சல் முகவரி :- thumi2016@gmail.com
இறுதித்திகதி :- 27.09.2020

# ஊடகவியலாளருக்கு எமனாகும் ஏமன்

ஐ.வி.மகாசேனன்

கருத்துருவாக்கம் மற்றும் அரசியல் சமூகமயப்படுத்தலில் முதன்மையான நிலையினை பெறுவது பத்திரிகைகள் ஆகும். சனநாயகத்தின் 4வது தூண் என ஊடகம் அரசியலில் முதன்மை பெறவும் பத்திரிகைத்துறையின் வகிபாகமே முதன்மையாகின்றது. எனிலும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் என்பது உலகம் பூராக பேரிடராகவே காணப்படுகின்றது. 1993ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தீர்மானத்தின் படி ஒவ்வொரு ஆண்டும் மே03ஆம் திகதி உலக பத்திரிகை சுதந்திர தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு 27ஆவது உலக பத்திரிகை சுதந்திர தினம் மே03ஆம் திகதி கொரோனா வைரஸ் முடக்கத்தின் விளைவாய் உணர்வுபூர்வமாக நினைவுகூறப்பட்டது. பத்திரிகை சுதந்திர தினம் 27 வருடங்களாய் கொண்டாடப்படும் நிலையிலும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதையே உலக நிகழ்வுகள் பறைசாற்றுகின்றது. அதனடிப்படையில் ஏமனில் மரணதண்டனை அபாயத்துக்கு உள்ளாகியுள்ள ஊடகவியலாளர்களின் நிலைப்பாடு தொடர்பிலே குறித்த கட்டுரை விபரித்துள்ளது.

ஏமன் உள்ளக முரண்பாட்டால் பேரழிவை சந்தித்து வரும் நாடாகும். "நீடிக்கும் மோசமான பாதிப்புகளால் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் தங்களின் உயிர் உட்பட எல்லாவற்றையும் இழக்க நேரிடலாம் என்று நாங்கள் அஞ்சுகின்றோம்." என ஏமனுக்கான ஐ.நா மனிதநேய ஒருங்கிணைப்பாளர் லிசி கிரான்டே எச்சரித்துள்ளார். 2014ஆம் ஆண்டு ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சிப்படையானது, ஏமனின் அதிபர் அபடுருபூ மன்சோர் ஹாதி அரசாங்கத்தை நீக்கி விட்டு ஏமனின் தலைநகர் சனா உட்பட நாட்டின் வடமேற்கு பகுதிகளை முற்றுகையிட்டு ஆட்சியை கைப்பற்றியது. சவுதி உட்பட்ட சுன்னி இஸ்லாமிய மதப்பிரிவை சேர்ந்த எட்டு அரேபிய நாடுகளின் ஆதரவோடு சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஏமன் அரசாங்கம் 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் ஏமனை மீட்டெடுக்க போரை ஆரம்பித்தது. அது இன்றுவரை வரை நீண்டு வருகின்றது. இப்போரினில் ஊடகவியலாளர் பலரும் இறந்துள்ளனர். 2015ஆம் ஆண்டு போர் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 10 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏமன் ஹூதி கிளர்ச்சியாளர்களால் நடத்தப்பட்ட நீதிமன்றம், 2015ஆம் ஆண்டு முதல் விசாரணைக்கு காத்திருந்த நான்கு பத்திரிகையாளர்களுக்கு கடந்த ஏப்ரல்11ஆம் திகதி மரண தண்டனை விதித்துள்ளது. ஹூதிகளுடன் போரிடும் சவுதி தலைமையிலான கூட்டணிக்கு ஒத்துழைப்பு வழங்கி ஹூதிகளை உளவு பார்த்ததாக குற்றம் சுமத்தி 2015ஆம் ஆண்டு ஜீன் மாதம் சனாவில் உள்ள ஒரு விடுதியில் 9 ஊடகவியலாளர்களும், ஆகஸ்ட் மாதம் சனாவில் உள்ள அவரது வீட்டில் ஒரு



ஊடகவியலாளரும் கைது செய்யப்பட்டார்கள். அந்த 10 பேர் குழுவிலிருந்தே அப்துல் கலேக் இம்ரான், அக்ரம் அல் வலித், ஹரத் ஹமீத், தவ்∴பிக் அல் மன்சூரி அகிய நால்வருக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டுள்ளதாக ஹீதி கிளர்ச்சிப்படையின் பாதுகாப்பு சட்டத்தரணி அப்துல் மஜீத் சப்ரா தெரிவித்துள்ளார்.

இங்கு ஹீதி கிளர்ச்சியாளர்கள் நீதியை பொய்ப்பித்துள்ளதாக மனித உரிமை செயற்பாட்டாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். புத்திரிகையாளர்கள் 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட போதிலும் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே முறையான குற்றங்களுடன் குற்றஞ்சாட்டப்பட்டனர். முதல் நீதிமன்ற அமர்வு 2019ஆம் ஆண்டு டிசம்பர் 9ஆம் திகதியே நடைபெற்றது. அந்த அமர்வில் பத்திரிகையாளர்களின் வழக்கறிஞர்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். எனிலும் பின்னர் நடைபெற்ற எந்த நீதிமன்ற அமர்விற்கும் பத்திரிகையாளர்கள் சார்பான வழக்கறிஞர்கள் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இது நீதிமன்ற நடவடிக்கைகள் பொய்ப்பிப்பதை உறுதிப்படுத்துகின்றது.

மேலும் 2015ஆம் ஆண்டில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டதிலிருந்து, 10 பத்திரிகையாளர்களும் வயிறு மற்றும் பெருங்குடல் வலி, காது கேளாமை, மூலநோய், மற்றும் தலைவலி உள்ளிட்ட பல மருத்துவ பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனிலும் அதற்காக போதுமான மருத்துவ சிகிச்சைகளும் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.



பத்திரிகை சுதந்திரத்தை வலியுறுத்தி பத்திரிகையாளர்களின் விடுதலையை வலியுறுத்தி அம்னஸ்டி சர்வதேசம் (Amnesty International), மனித உரிமைகளுக்கான மவதான, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சமீர் ஹாசீர் அமைப்பு போன்ற மனித உரிமைசார் செயற்பாட்டு தளத்தில் பயணிப்போர் கடுமையாக செயற்பட்டு வருகின்றனர். எனிலும் இதுவரை சாதகமான முடிவுகள் ஏதும் கிடைக்கவில்லை என்பது துர்பாக்கியமே ஆகும்.

“இந்த துணிச்சலான ஊடகவியலாளர்கள் ஏமனில் உள்ள துன்பங்களை பற்றிய உண்மையை உலகுக்கு சொன்னதற்காக மரண அபாயத்தில் இருப்பது மூர்க்கதத்தனமானது.” என அம்னஸ்டி இன்டர்நே'னலின் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா பிராந்திய இயக்குநர் ஹெபா மொரயெ∴ப் தெரிவித்துள்ளார். மேலும், “உலக பத்திரிகை சுதந்திர தினத்தை குறிக்க, ஹீதி அதிகாரிகள் உடனடியாக அவர்களின் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும், நிலுவையில் உள்ள அனைத்து குற்றச்சாட்டுகளையும் கைவிட வேண்டும். மற்றும் அவர்களின் பணிக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து பத்திரிகையாளர்களையும் விடுவிக்க வேண்டும்.” என தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். எனிலும் ஹீதி கிளர்ச்சிப்படையிடமிருந்து எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஏமனின் அரசாங்கமும் தீர்ப்பை விமர்சித்துள்ளது. தகவல் அமைச்சர் அல் எரியானி தனது ட்விட்டர் பதிவில், “குறைந்தபட்ச நீதி மற்றும் ஒருமைப்பாடு இல்லாத ஒரு விசாரணையில் சட்டவிரோத மரணதண்டனைகளை நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம்.” என பதிவிட்டுள்ளார். எனிலும் உள்ளகப்போரில் இரு தரப்புமே ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை பறித்துள்ளனர். நியூயோர்க்கை தளமாக கொண்ட ஊடகவியலாளர்கள், மோதலின் இருதரப்பினரும் பத்திரிகை சுதந்திரங்களை மீறியுள்ளனர் என குற்றஞ்சாட்டியுள்ளனர். 2020ஆம் ஆண்டு உடக சுதந்திர குறிகாட்டியில் ஏமன் 167வது இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இது இரு தரப்பினதும் தவறுகளையே உணர்த்துகின்றது.

பத்திரிகையாளர்களுக்கு காணப்படும் அச்சுறுத்தல் என்பதற்கான ஓர் எடுத்துக்காட்டே ஏமனாகும். எனிலும் யுனெஸ்கோ வெளியிட்டுள்ள தகவலின்படி சர்வதேச அளவில் ஒவ்வொரு நாளும் 5 நாள் இடைவெளியில் உலகின் ஏதோ மூலையில் ஏதோ ஒரு பத்திரிகையாளர் அல்லது ஊடகவியலாளர் கொலையுண்டு கொண்டே தான் இருக்கின்றார். இதில் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் புலனாய்வு இதழியல் பத்திரிகையாளர்களே ஆகும். இவர்கள் தேசத்துரோக வழக்குகளின் கீழ் ஆட்சிப்பீடங்களால் நசுக்கப்படுகின்றனர். இந்த நிலை வன்மையாக கண்டிக்கத்தக்கது ஆகும். உலகின் அவசரகால சூழ்நிலைகளின் போது ஊடவியலாளர்களின் பணி அளப்பரியது. ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பெரும்பாலும் பறிபோவது அவசரகால நிலைமையினை அரசுகள் பிரகடனப்படுத்துகையிலேயே ஆகும். இலங்கையிலும் போர்க்காலத்தில் பல ஊடகவியலாளர்களின் உயிர்களே இனந்தெரியாத நபர்களால் நசுக்கப்பட்ட போதும் இதுவரை நீதி கிடைக்கப் பெறவில்லை. இலங்கையின் போர்க்கால ஊடகவியலாளர்களின் படுகொலை பட்டியல் நெடியதாகும். இன்று ஓரளவு ஊடக சுதந்திரம் காணப்படினும் கடந்த காலங்களில் இடம்பெற்ற படுகொலைகளுக்கான நீதி கிடைக்கப்பெறாமை இன்னும் இலங்கையில் ஊடக சுதந்திரம் முழுமையாக கிடைக்கப்பெறாமையை உணர்த்துகின்றது. சிரியா, மெக்ஸிகோ போன்ற நாடுகளில் இன்றும் இடம்பெறும் மோதல்கள் அப்பிராந்தியத்தில் ஊடகவியலாளர்கள் சுதந்திரத்தை கேள்விக்குறியாக்கிறது.




எனிலும் நியுயோர்க்கை தளமாக கொண்டு இயங்கும் பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் குழு 2019ஆம் ஆண்டு 17 ஆண்டுகளுக்கு பிறகு பத்திரிகையாளர்களின் கொலை குறைந்துள்ளதாக அறிவித்துள்ளது. எனிலும் 2019ஆம் ஆண்டில் 25 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏமன் போன்றே உலகில் பல நாடுகளிலும் ஊடகவியலாளர்கள் தங்கள் பணி நிமித்தம் சிறைகளுக்குள் வாழ்வை இழக்கின்றார்கள். இலவச பத்திரிகை கூட்டணி ஒன்று கொரோனா தொற்று அபாயத்தை கருத்தில் கொண்டாவது, உலகளவில் பத்திரிகை சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள அனைத்து பத்திரிகையாளர்களையும் உடனடியாக விடுவிக்க அழைப்பு விடுத்துள்ளது. எனிலும் அரசாங்கங்கள் செவிப்பறையற்றவர்களாகவே தொடர்ச்சியாக செயற்படுகின்றனர். போர்க்களத்தில் மற்றும் கொரோனா போன்ற அனர்த்த சூழல்களிலும் ஊடகவியலாளர்கள் உயிரற்ற உடலாகவே அலைகின்றனர். போர்க்களத்தில் சுதந்திரம் என்பது கேள்விக்குறியாவது யதார்த்தமானதே. எனிலும் ஏற்கமுடியாத நிலைப்பாடாகும். பத்திரிகை சுதந்திர தினத்தை நடைமுறைமுறைப்படுத்தியுள்ள ஐ.நா ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை பாதுகாக்கும் வகையில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். தவறும் படசத்தில் சுதந்திர தின ஆண்டுகளே அதிகரிக்குமே தவிர ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் விடையற்ற கேள்வியாகவே காணப்படும்.

# வழுக்கியாறு
## சூழற்தொகுதியின் அமைப்பும் தொழிற்பாடும்

5

### வழுக்கியாறு சூழற்தொகுதியின் எல்லைகள்

பொதுவாக பண்பியல் ஆய்வுகளின் போது பல்வேறுபட்ட அளவிடைகள் சூழற்தொகுதி எல்லை நிர்ணயத்தில் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் வழுக்கியாறு சூழற்தொகுதியின் எல்லை நிர்ணயத்தின் போது மக்களின் அன்றாட தேவைகள் மற்றும் அவர்களது வாழ்வாதாரம் என்பன வழுக்கியாறு வடிநிலத்துடன் கொண்டுள்ள தொடர்புகள், மாசாக்க நடவடிக்கைகள், இயற்கை வளங்களின் பாவனை, மனித சமூக குழுக்களுக்கு இடையிலான இடைத்தொடர்புகள் வழுக்கியாற்றை அடிப்படையாகக் கொண்டு பேணப்படுதல் மற்றும் சமய கலாச்சார நம்பிக்கைகள் என்பன முக்கிய கருப் பொருட்களாக கொள்ளப்பட்டு குறித்த வழுக்கியாறு சூழற்தொகுதியின் எல்லை நிர்ணயத்தில் பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறப்பட்ட அளவிடைகளின் அடிப்படையில் வழுக்கியாறு சூழற்தொகுதியில் இயங்கும் சூழற்தொகுதியை முழுமையாக ஒரு அலகாக நோக்க முடியும். ஏனெனில் அங்கு காணப்படும் கிராமங்களையோ அல்லது ஒரு சமுதாய குழுமத்தையோ அல்லது தற்போது நடைமுறையில் இருக்கும் அரச நிர்வாக அலகுகளான கிராமஉத்தியோகத்தர் பிரிவு அல்லது பிரதேச செயலர் பிரிவு என்றவாறாக பிரித்து நோக்குவது கடினமான விடயமாகும். ஏனெனில் அங்கு காணப்படும் சகல உயிருள்ள, உயிரற்ற பொருட்களும் தொழிற்பாட்டு ரீதியில் ஒன்றுடன் ஒன்று சிக்கலாக பிணைக்கப்பட்டு காணப்படுகின்றன.

பொதுவாக வழுக்கியாற்று வடிநிலத்தின் புவியியல் அம்சங்களான இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதீக அம்சங்களை குறிப்பிட முடியும். அவற்றில் நாம் பொதுவாக அவதானிக்கக்கூடிய கிணறுகள், குளங்களும் வடிகால்களும், விவசாய நிலங்கள், கோயில்கள், மனித குடியிருப்புக்கள், வர்த்தக நிலையங்களும் பொது கட்டடங்களும், மயானங்கள் மற்றும் ஆண்டுத்தாவரங்கள் என்பவற்றை விசேடமாக குறிப்பிட முடியும்.

வழுக்கியாறு சூழற்தொகுதி எனும் பொழுது சமூக இடைத்தாக்கம் என்பது ஒரு பகுதியாகவும் இயற்கை சூழற்தொகுதி ஒருபகுதியாகவும் கொள்ளப்படுகின்றன. இவ் இரண்டிற்கும் இடையிலான இடைத்தாக்கங்கள் ஆதிகாலத்தில் இருந்து சிறப்புற பேணப்பட்டு வந்துள்ளதுடன் இது பற்றிய ஆராய்வுகள் தொகுதியின் நீடித்த நிலை பேறான பயன்பாட்டிற்கான திட்டமிடலுக்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்றன.

சமூகஇடைத்தாக்தமானது சமூக அந்தஸ்த்து மற்றும் வாழ்வாதாரம், கலாச்சார விழுமியங்களும் நம்பிக்கைகளும், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் செயற்பாடுகள், சமூக இடைத்தொடர்புகள் மூலமாக இயங்கு நிலையை பெறுகின்றது. அதே போன்று இயற்கைச் சூழற்தொகுதியானது உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்கள் மூலமாக நிலவுகை அடைகின்றது. இங்கு உயிருள்ள பொருட்கள் எனும் பொழுது மிருகங்கள், பறவைகள், மீன்கள், தாவரங்கள் என்பன அடங்குவதுடன் உயிரற்ற பொருட்கள் எனும்பொழுது மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதீக கட்டுமானங்களும் உயிரற்ற இயற்கை வளங்களும் அடங்குகின்றன. உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களுக்கிடையிலான இடைத்தாக்கம் மூலமாக இயற்கைச் சூழற்தொகுதியானது இயக்கமடைகின்றது.



T.K.மகி



அக்னி



# யுவராஜ் சிங் எனும் யுக வீரன்

2014 T-20 உலகக்கோப்பை இறுதிப் போட்டியின் பின்னர் யுவராஜ் சிங் இந்திய அணியில் இருந்து எப்படியும் நீக்கப்பட்டு விடுவார் என்பது கிட்டத்தட்ட உறுதியானது. ஆட்டமும் மந்தமாகியது, வயதாகி விட்டது வேறு. ஆனாலும் யுவராஜ் இந்திய அணிக்கு ஆடுவதை விரும்பினார். ஆனாலும் அடுத்தடுத்த தொடர்களுக்கான இந்திய அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்டார்.

ஆனால் 2014 ஜீலையில் இங்கிலாந்தின் லார்ட்ஸ் மைதானத்திலே "Rest of the World XI" அணிக்கும் "Melbourne Cricket Club" அணிக்கும் நட்புரீதியான போட்டி ஒன்று இடம்பெற்றது. அந்த போட்டியில் சேன் வோர்ன் தலைமையிலான "Rest of the World XI" இல் விளையாடினார் யுவராஜ் சிங். அந்த போட்டியில் ஒரு கட்டத்தில் 59 ஓட்டங்களுக்கு 3 இலக்குகள் இழந்து தடுமாறிய அணியை சதம் அடித்து 293 ஓட்டங்கள் என்ற சிறந்த ஓட்ட இலக்கை அடைய உதவினார். ஆனாலும் சச்சின் டெண்டுல்கர் தலைமையிலான Melbourne Cricket Club அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் போட்டியை வெற்றி பெற்றது. அதன் பிறகும் 2014 முழுவதும் இந்திய அணியில் வாய்ப்பு கிடைக்காமலே இருந்தது.

2015 பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஆஸ்திரேலியாவில் உலகக்கோப்பை நடைபெற இருந்தது. 2014 இன் பிற்பகுதி முழுவதும் அணியில் இருந்து ஓரங்கட்டப்பட்ட யுவராஜ், உலகக்கோப்பைக்கான 30 வீரர்கள் உள்ளடக்கிய தெரிவு குழாமில் கூட பெயரிடப்படவில்லை. ஆஸ்திரேலிய மைதானங்களில் சுழல்பந்து வீசும் சகலதுறை ஆட்டக்காரரை விட வேகப்பந்து வீசும் சகலதுறை வீரர் ஒருவரை இந்திய அணி நிர்வாகம் விரும்பியது. அத்தோடு ஆஸ்திரேலிய மைதானங்கள் ஒப்பீட்டளவில் பெரியவை. துடிப்பான இளம் வீரர்களே களத்ததடுப்பிற்கும் ஏற்றவர்களாக இருப்பார்கள் என்ற கருத்துக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் செவி சாய்த்தது போலும். அந்த உலகக்கோப்பை தொடர் முழுவதும் சிறப்பாக விளையாடிய இந்திய அணி அரையிறுதியில் ஆஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்து நாடு திரும்பியது.



ஆனாலும் இந்திய அணிக்கு விளையாட வேண்டும் என்ற ஆர்வத்தில் யுவராஜ் மீண்டும் உள்ளூர் மோட்டிகளில் களம் இறங்கினார். 2015 Vijay Hazare கிண்ண போட்டி தொடரில் சிறப்பான ஓட்டக்குவிப்பின் மூலம் 2016 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்ட T-20 தொடருக்கான இந்திய அணயில் வாய்ப்பு கிடைத்தது. ஆனாலும் ஒரே ஒரு போட்டியிலேயே துடுப்பெடுத்தாட வாய்ப்பு கிடைத்தது. அந்த போட்டியில்



ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்கள் குவித்ததோடு இறுதிப்பந்து பரிமாற்றத்தில் அந்த ஓட்டங்களை குவித்து இந்திய அணியை வெற்றி பெற செய்தார். இந்திய அணி மூன்று T-20 போட்டிகளிலும் வெற்றி பெற்று தொடரை முற்று முழுதாக கைப்பற்றியது. ஆனாலும் 2016 ஆகஸ்ட் மாதம் மேற்கிந்திய தீவுகளுடனான போட்டித்தொடருக்கான இந்திய அணியில் மீண்டும் கழற்றி விடப்பட்டார். ஆனாலும் Duleep கிண்ண தொடரில் India Red அணிக்கான அணித்தலைவராக அறிவிக்கப்படார். இறுதிப்போட்டியில் India Blue அணியிடம் India Red அணி தோல்வியடைந்தது.

தனது முயற்சியில் சற்றும் தளராத விக்ரமாதித்தன் போல் மீண்டும் இந்திய அணிக்காக ஆட வேண்டும் என்ற ஆசையில் உள்ளூர் போட்டிகளில் களம் இறங்கினார் யுவராஜ் சிங். 2017 ரஞ்சி கிண்ண போட்டிகளில் பஞ்சாப் அணிக்காக ஒரு இரட்டை சதம் அடங்கலாக ஐந்து போட்டிகளில் 672 ஓட்டங்களை குவித்தார். பலனாக இந்தியாவில் நடைபெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரிற்கு இந்திய அணியில் உள்வாங்கப்பட்டார். இரண்டாவது ஒரு நாள் போட்டியில் ஒருநாள போட்டிகளில் தனது உயர்ந்தபட்ச



ஓட்டப்பெறுதியாக 150 ஓட்டங்களை குவித்தார். அத்தோடு நான்காவது இலக்குக்காக தோனியுடன் இணைந்து 256 ஓட்டங்களை பகிர்ந்ததோடு ஆட்டநாயகனாகவும் தேர்வானார். அடுத்து 2017 இல் இங்கிலாந்தில் நடைபெற்ற சாம்பியன் கிண்ணத் தொடரிற்கான இந்திய அணியிலும் உள்வாங்கப்படார் யுவராஜ். அந்த தொடரில் சொல்லிக்கொள்ளும்படியாக லீக் ஆட்டம் ஒன்றில் பாகிஸ்தான் அணிக்கு எதிராக 32 பந்துகளில் 53 ஓட்டங்களை குவித்ததோடு ஆட்டநாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டார். அந்த வருடம் மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணியில் உள்வாங்கப்பட்டு இருந்தார் யுவராஜ்.



அந்த தொடர் தான் இந்திய அணிக்காக யுவராஜ் சிங் ஆடும் இறுதி தொடர் என அவர் கூட நினைத்திருக்க மாட்டார். அதன் பிறகு இலங்கை அணியுடனான அணித்தேர்வின் போது yo-yo test என அழைக்கப்படும் உடல்தகுதி சோதனையை நிறைவேற்ற தவறினார் என அணியில் இருந்து கழற்றி விடப்பட்டார்.

**ஒரு சகாப்த வீரனின் இறுதித்தருணங்கள் கண்ணீர்களுடன் கரைந்து கொண்டு இருந்தது....**